30TH
JANUARY
2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 67 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com



## பேரீத்தம் பழ விநியோகம் திங்கள் முதல் ஆரம்பம்

சவுதி அரேபியாவில் இருந்து இலங்கைக்கு கிடைத்திருக்கும் பேரீத்தம் பழங்கள்

02ம் பக்கம்பார்க்க...



# முதலீட்டு மூலதன செலவீட்டுக்காக பட்ஜெட்டில் 1.35 டிரில்லியன் ஒதுக்கீடு

### வரலாற்றில் ஒதுக்கப்படும் மிகப் பெரும் தொகை பொருளாதார மாநாட்டில் ஜனாதிபதி அனுர

எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில் மூலதனச் செலவினமாக 1.35 டிரில்லியன் ரூபாயை ஒதுக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும், இது அண்மைக் காலத்தில் மூலதனச் செலவினங்களுக்காக ஒரு அரசாங்கம் செலவிடும் மிகப்பெரிய தொகையாகும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெற்ற 2025 பொருளாதார உச்சி மாநாட்டில் உரையாற்றும்

02ம் பக்கம்பார்க்க...



## ஞாயிறன்று மாவையின் இறுதிக் கிரியைகள்

நேற்றிரவு காலமான இலங்கை தமிழரசுக் கட்சியின்

02ம் பக்கம்பார்க்க...

## மதீனாவுக்கு செல்ல கிடைத்தது பெரும் பாக்கியம்

### அமைச்சர் சுனில் செனவி

சவூதி அரேபிய விஜயத்தின் போது புனித நகரான மதீனாவுக்கு விஜயம் செய்யக் கிடைத்ததை பெரும் பாக்கியமாக கருதுகிறேன் என புத்த சாசன மத விவகார கலாச்சார அமைச்சர் கலாநிதி ஹினிதும

02ம் பக்கம்பார்க்க...

## கொள்கலன் குற்றச்சாட்டை மறுக்கும் ஹனீப் யூஸுப்



சோதனை செய்யப்படாமல் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் தம் மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகளை மறுப்பதாக மேல் மாகாண ஆளுநர் ஹனிஃப் யூசுப் தெரிவித்தார்.

அந்த

02ம் பக்கம்பார்க்க...

## அமைச்சரவைப் பேச்சாளரின் அறிவிப்பு; ஜனநாயகம், சட்டத்துக்கு முரண்

### மு.கா.செயலாளர் நிஸாம் காரியப்பர் எம்.பி.



(ஏ.எஸ். மௌலானா)

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அறிவித்தது ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் முரணானது என்று நாங்கள் கருதுகிறோம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற

03ம் பக்கம்பார்க்க...

## ஐ.எஸ்.ஐ.எஸ்ஸுக்கு ஆட்களைத் திரட்டுவோரை கண்டறிய தமிழ் நாட்டில் தீவிர தேடுதல்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் சித்தாந்தத்தை ஊக்குவிப்பவர்களை கண்டறியும் நோக்கில் தமிழகத்தில் 16 இடங்களில் தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ)

03ம் பக்கம்பார்க்க...

## முஸ்லிம் மீடியா போரத்தின் இரு நூல்கள் இன்று கொழும்பில் வெளியீடு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள இரு தமிழ் நூல்களின் வெளியீட்டு விழா இன்று 30 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கொழும்பு - 07 இலங்கை மன்றக்

03ம் பக்கம்பார்க்க...

## பலமான எதிர்க் கட்சியை உருவாக்க ஓரணியில் திரளுங்கள்

### எதிர்க் கட்சியினருக்கு சஜித் அறைகூவல்!



பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் குரலை மேலும் மேலோங்கச் செய்து, வலுவான எதிர்க்கட்சியைக் கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள் பாராளுமன்றத்தில் கூடினர்.

பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பலமான எதிர்க்கட்சியை உருவாக்கி, மக்களின்

03ம் பக்கம்பார்க்க...

## அரசியலமைப்பு விதிகளின் படி முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளைக் குறைக்க முடியாது

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் உட்பட பல சலுகைகளை அரசியலமைப்பின் விதிகளின்படி குறைக்க முடியாது என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு தற்போது தனது அறிக்கையை

02ம் பக்கம்பார்க்க...

## ஷஃபானைத் தீர்மானிக்கும் கூட்டம் இன்று

ஹிஜ்ரி 1446 ஷஃபான் மாதத்தின் தலைப் பிறையைத் தீர்மானிப்பதற்கான கூட்டம் இன்று (30)

02ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## முதலீட்டு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

“பொருளாதார நிலைமாற்றம்“ என்ற தொனிப்பொருளில் இலங்கை வர்த்தக சபை இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தது. அரசியல் ஸ்திரத்தன்மை, கடன் மறுசீரமைப்பு மற்றும் இறையாண்மை, கடன் தரநிலையை மேம்படுத்துதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தென்கிழக்கு ஆசியாவில் ஒரு மாற்றத்திற்கு இலங்கையை தயார்படுத்துவதே இந்த உச்சிமாநாட்டின் நோக்கமாகும். அத்தோடு இதன் ஊடாக 2025 ஆம் ஆண்டில் சகலவித பொருளாதார முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இந்த ஆண்டு 4மூ க்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும், அந்த இலக்கை வெற்றிகொள்வதற்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க,

நாங்கள் இதற்கு முன்பு ஒருபோதும் அதிகாரத்தில் இருக்காத ஒரு அரசியல் இயக்கமாகும். கடந்த காலத்தில் வணிகக் குழுக்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தில் சிலருக்கு எங்களைப் பற்றி ஏதேனும் சந்தேகம் இருந்திருந்தால், தற்போது அந்த சந்தேகத்தை நீக்கி, அரசாங்கத்தின் எதிர்கால திட்டம் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால போக்கில் நம்பிக்கையை வளர்க்க முடிந்துள்ளது. இது கடந்த இரண்டு மாதங்களில் நாங்கள் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி விகிதம் 4மூ க்கும் அதிகமாக இருக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் இதுவொரு சவாலாக இருந்தாலும், அதை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய ஒரு சவாலாக நாங்கள் கருதுகிறோம். நாங்கள் பல துறைகளுக்கு முன்னுரிமை அளித்து பணியாற்றி வருகிறோம்.

குறிப்பாக, வரவிருக்கும் பட்ஜெட்டில் 1.35 டிரில்லியன் ரூபாயை அரசாங்க முதலீட்டு மூலதனச் செலவினங்களாகச் செலவிட எதிர்பார்க்கிறோம். இது சமீபத்திய காலங்களில் மூலதனச் செலவினங்களுக்காக ஒரு அரசாங்கம் செலவிட்ட மிகப்பெரிய தொகையாக இருக்கும்.

முந்தைய அரசாங்கங்களின் செயற்திறனின்மை காரணமாக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக செலவிடப்படவில்லை. சுமார் 75% – 80% மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால் இந்த ஒதுக்கப்பட்ட பணத்தை முழுமையாகச் செலவிட தேவையான வழிமுறையை நாங்கள் தயாரித்து வருகிறோம்.

அண்மையில் முதலீட்டுடன் தொடர்புள்ள அமைச்சுக்களின் மற்றும் அரச அதிகாரிகளுடன் நீண்ட கலந்துரையாடல் நடத்தினோம். பொதுவாக எமது நாட்டிற்கு முதலீடுகளை பெற 82 நிறுவனங்களிடம் இருந்து அனுமதி பெறப்பட வேண்டும் என்பது தெரியவந்தது.

அந்த அறிக்கையின்படி, இந்த நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெற இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் செல்லும். சுற்றுச்சூழலுக்கான அனுமதி பெறக்கூடிய 11 நிறுவனங்கள் உள்ளன. இதற்கு 269 நாட்கள் ஆகும். நடைமுறையில், இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் செல்கிறது. இதை 82 நாட்களாகக் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஒரு முதலீட்டுத் திட்டத்திற்கு 8 நிறுவனங்களிடமிருந்து ஏனைய அனுமதிகளைப் பெற வேண்டும். நடைமுறையில், அதற்காக 184 வாரங்கள் கடந்துவிடுகிறது. இதை 102 நாட்களாகக் குறைக்க முடியும் என நாங்கள் கருதுகிறோம்.

ஒரு திட்டத்தை மதிப்பீடு செய்து முடிவெடுக்க முதலீட்டு சபைக்கு 80 நாட்கள் ஆகும். இதை இரண்டு வாரங்களாகக் குறைப்பதே எங்கள் எதிர்பார்ப்பாகும். பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாக இருந்தால், அந்நிய நேரடி முதலீட்டிற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

சுற்றுலாத் துறையில் விரைவான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும் நமக்கு உள்ளது. இந்த ஆண்டு 3 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு அழைத்து வர எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் கப்பற் துறைகளில் முன்னேற்றத்தை அடைய முடியும். மேற்கு இறங்குதுறையில் செயல்பாடுகள் இந்த மார்ச் மாதத்தில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. கிழக்கு இறங்குதுறையில் செயல்பாடுகள் ஜுலை மாதத்திற்குள் தொடங்க முடியும். எனவே, கடல்சார் துறையில் ஓரளவு பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியும். நாம் விரும்பும் பொருளாதார வளர்ச்சியை அடைய முன்னுரிமை அளிக்க வேண்டிய பல துறைகளை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். எனவே, இந்த இலக்குகளை வெற்றிகொள்ள முடியும் – என்றார்.

## பேரீத்தம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாட்டின் 2,800 பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் MSM.நவாஸ் தெரிவித்தார். இம்முறை ஒரு பள்ளிவாசலுக்கு 18 கிலோ வீதம் பேரித்தம் பழங்கள் விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் அவர்களது மாவட்டத்தின் பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் அந்த மாவட்ட மையத்திலிருந்து பேரீத்தம் பழங்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பள்ளிவாசலில் நிர்வாகிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5,6 மற்றும் 7ம் திகதிகளில் இந்த பேரித்தம் பழங்கள் விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஞாயிறன்று..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜாவின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (2) யாழ்ப்பாணம் மாவிட்டபுத்தில் நடைபெறவுள்ளது.

சுகயீனமுற்ற நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்தார். தெல்லிப்பழை மாவிட்டபுரத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரின் பூதவுடலுக்கு அரசியல் வாதிகள் மதத் தலைவர்கள் உட்பட பெருந்திரளானோர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

## நாட்டில்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் குறைக்கப்படுவதை அரசியலமைப்புச் சட்டம் தடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

மகிந்த ராஜபக்ச தற்போது வசித்து வரும் 30,000 சதுர அடி வீட்டிற்குப் பதிலாக மற்றொரு வீட்டை வழங்குவதாக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறினார். இதற்கிடையில், முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை வெட்டுவதற்கு அரசியலமைப்பு தடையாக இருப்பது தொடர்பில் விசாரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் உட்பட பல சலுகைகளை அரசியலமைப்பு திருத்தம் இல்லாமல் குறைக்கவோ அல்லது இரத்து செய்யவோ முடியாது என்றும் குழு கூறியதாக கூறப்படுகிறது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை வெட்டுவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பதை விசாரிக்க ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இந்தக் குழுவை நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

## கொள்கலன்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கொள்கலன்களுடன் தனக்கு எந்த தொடர்பும் இல்லை என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தக் குற்றச்சாட்டுகளால் தான் வருத்தமடைந்ததாகவும் ஆளுநர் கூறினார்.

தான் ஒருபோதும் அரசியல் செய்ய வரவில்லை என்றும், மக்களுக்கு சேவை செய்ய மட்டுமே விரும்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், மேல் மாகாண மக்களுக்கு பயனுள்ள பணிகளை மேற்கொள்வதே தனது நோக்கம் என்று கூறினார்.

அண்மையில் துறைமுகத்திலிருந்து சோதனை செய்யப்படாமல் விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் மேல் மாகாண ஆளுநர் ஹனிஸ் யூசுப் இறக்குமதி செய்த கொள்கலன்களும் இருப்பதாக பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சமூக ஊடகங்களிலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஷஃபான்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இன்றிரவு நடைபெறவுள்ளது.

பிறை கண்டவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

011 2432110 / 011 2451245 / 0777 353789

## மதீனாவுக்கு..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சுனில் செனவி தெரிவித்தார்.

ஹஜ் ஏற்பாட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக சவூதி அரேபியா சென்றிருந்த போது புத்த சாசன அமைச்சர் விஷேடமாக மதீனா நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

முஸ்லிம்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட மதீனா நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து உதயம் அமைச்சரிடம் கேட்ட போது இது என் வாழ்வில் கிடைத்த ஒரு பாக்கியமென்றும் இதற்காக சவூதி அரேபிய அரசுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.







## முஸ்லிம்....

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் எழுதியுள்ள "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள்" என்ற நூலும் பேராசிரியர் ராஜன் ஹூல் ஆங்கிலத்தில் எழுதிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆங்கில நூலின் தமிழ் மொழி பெயர்ப்பான "உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் மறைக்கரம் வெளிப்பட்ட போது" என்ற பெயரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளநூலும் இன்று வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில், ஜனாதிபதி சட்டத்தரணிகளான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். எம். சுஹைர், எம். ஏ.சுமந்திரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் மஹிந்த ஹத்தக




ஆகியோர் உரையாற்றவுள்ளதோடு, நூல் விமர்சனத்தை பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் நிகழ்த்தவுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் தலைவர் என். எம். ஆமீன் ஆகியோர் நிகழ்வில் உரையாற்றவுள்ளனர்.

இந்த நிகழ்வின் போது இரு நூல்களும் சலுகை விலையில் வழங்கப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளர் சாதிக் சிஹான் தெரிவித்துள்ளார்.

---

## ஐ.எஸ்....

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

செவ்வாய்க்கிழமை சோதனை நடத்தியது. குறிப்பிட்ட உள்ளீடுகளின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை, சீர்காழி உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் 15 இடங்களிலும், சென்னை புரசைவாக்கத்தில் ஒரு இடத்திலும் என 16 இடங்களில் செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் சித்தாந்தத்தை ஊக்குவிப்பவர்கள், அந்த அமைப்புக்கு ஆட்களைச் சேர்ப்பவர்கள் ஆகியோரை கண்டறிவது மற்றும் அவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பது ஆகியவற்றில் என்ஐஏ தீவிரமாக செயல்பட்டு வருகிறது இந்நிலையில், ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் சித்தாந்தத்தை ஊக்குவிப்பது மற்றும் ஆட்களை சேர்ப்பது ஆகியவற்றில் ஈடுபடும் சந்தேக நபர்களின் மறைவிடங்களில் என்ஐஏ இன்று காலை முதல் சோதனைகளை நடத்தி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 16 இடங்களில் இந்த சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. சந்தேக நபர்கள் தொடர்பாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த சோதனைகள், இது தொடர்பான ஆதாரங்களை கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டவை என நடவடிக்கைக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐஎஸ்ஐஎஸ் ஆதரவாளர்கள் மீது கடந்த ஆண்டு வழக்குப்பதிவு செய்து அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில், அவர்களின் பங்கு வெளிப்பட்டது.

கடந்த ஆண்டு அக்டோபர் 21-ம் தேதி, தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பு வழக்கில், ஐஎஸ்ஐஎஸ்-ஆல் ஈர்க்கப்பட்ட மூன்று குற்றவாளிகளை என்ஐஏ கைது செய்தது. அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், மூன்று குற்றவாளிகளும் பயங்கரவாதச் செயலுக்கு நிதி வழங்க கூட்டுச் சேர்ந்தது தெரியவந்தது.

இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் புரசைவாக்கத்தை சேர்ந்த அல்ஃபாசிஸ் என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருவதாக என்.ஐ.ஏ அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். பல்வேறு இடங்களில் நடைபெற்ற இந்த சோதனையில் பல்வேறு எலக்ட்ரானிக் உபகரணங்கள், துண்டு பிரசுரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இன்று மாலை விரிவான அறிக்கை தரப்படும் என என்.ஐ.ஏ. அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## அமைச்சரவை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது

தற்பொழுது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் விஷேட சட்ட மூலம் அடிப்படையில் ஊள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனு பெறப்படும் திகதி அறிவிக்கும் முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அவர்களுக்கு கீழ் இயங்கும் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதத்துக்குள் உள்ள ஒரு திகதியாக வேண்டும்.

ஆகவே தேர்தல் ஆணைக்குழு சகல அரசியல் கட்சி செயலாளரகளை அழைத்து கலைந்தாலோசித்த பிற்பாடு திகதி அறிவிக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்துக்கோ அல்லது ஒரு கட்சிக்கோ சாதகமாக திகதியை தீர்மானிப்பது ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாக நாங்கள் கருதுகிறோம்- என்று நிஸாம் காரியப்பர் எம்.பி தெரிவித்துள்ளார்.

---

## பலமான...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பிரச்சினைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் அனைவரையும் ஒன்று திரட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக கட்சித் தலைவர்களை கேட்டுக் கொண்டார். இதன் மூலம் பலமான பாராளுமன்றத்தை உருவாக்க முடியும் என்றும், அரசாங்கத்தின் சிறந்த விடயங்களுக்கு ஆதரவளிப்பது போலவே, நாட்டுக்கும் மக்களுக்கும் பாதகம் விளைவிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிராக மக்கள் பக்கம் நாம் முன்நிற்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பில், அனுராத ஜயரத்ன, சாணக்கியன் இராசமாணிக்கம், மனோ கணேசன், பழனி திகாம்பரம், கயந்த கருணாதிலக, ஜே.சி. அலவத்துவல, அஜித் பி. பெரேரா, ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

# கட்டார், இலங்கை வர்த்தக, முதலீட்டு ஊக்குவிப்பை வலியுறுத்திய புதிய தூதுவர்

**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

கட்டார் நாட்டிற்கான இலங்கையின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சித்தாரா அஸ்ரப்கான் அசாரட் 23 ஜனவரி 2025 அன்று தோஹாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடமைகளைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து ஊழியர்களிடம் உரையாற்றிய கான் அசாரட் இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகள் மற்றும் இலங்கைக்கும் கட்டாருக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான திட்டங்களையும் கோடிட்டுக் காட்டினார். இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பது மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்துவது ஆகியவற்றின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரியான இவர் தற்போது தூதுவராக நியமிக்கப்பட் டுள்ளார். 1998 இல் இலங்கை வெளிநாட்டு சேவையில் இணைந்து வெளிவிவகார அமைச்சில் பல்வேறு உயர் பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சில் கடமையாற்றிய இவர் சமீபத்தில் சார்க் மற்றும் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளின் கூடுதல் செயலாளராக உள்ளார். அவர் கத்தாரில் தூதுவராக கடமைகளை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அவர் இலங்கை தூதரகங்கள் மற்றும் லண்டன். சென்னை. தோஹா மற்றும் ஒட்டாவாவில் உள்ள தூதரகங்களில் பணியாற்றினார். அங்கு அவர் துணை உயர் ஸ்தானிகராகவும். செயல் உயர் ஆணையராகவும் பணியாற்றினார்.

துவராக நியமிக்கப்பட்டுள்ள சித்தாரா கான் அசாரட் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை கலைப் பட்டமும். இந்தியாவின் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில்



முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். கொழும்பு மெதடிஸ்ட் கல்லூரியின் முன்னாள் மாணவியான இவருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர்.

தூதுவராக நியமிக்கப்பட்ட முதல் முஸ்லிம் பெண்மணி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் தாயின் பெற்றோர் மன்னார் விடத்தல் தீவை பிறப்பிடமாக் கொண்டவர்கள் என்பதுடன் சித்தரா கான் கொழும்பில் பிறந்து வளர்ந்து உயர் கல்வியைக் கற்றவர் என்பதுடன் தமிழ், ஆங்கிலம், சிங்களம், கிந்தி உள்ளிட்ட பல மொழிகளிலும் பேசக் கூடியவர் என்பதும் அவரின் திறமையின் எடுத்துக் காட்டாகும்.




www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2025 JANUARY 30 - THURSDAY

WEB: www.uthayam.lk

E-mail: editor.uthayam@gmail.com

FB ID: உதயம்

# சவூதி அரேபியாவின் மனிதாபிமான உதவி

புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம்களின் பயன்பாட்டிற்காக சவுதி அரேபியா இம்முறையும் 50 மெட்ரிக் டன் பேரீத்தம் பழங்களை அனுப்பி வைத்துள்ளது. இப்பேரீத்தம் பழங்களை இலங்கை அரசிற்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்களன்று கொழும்பில் உள்ள சவுதி அரேபிய தூதுவராலயத்தில் இலங்கையின் சவுதி அரேபியாவின் தூதுவர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புத்த சாசன சமய விவகார கலாச்சார அமைச்சர் இனிதும சுனிசனவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ஹினிதும சுனில் செனவி இந்த உதவிக்காக சவுதி அரேபியா அரசிற்கு நன்றி தெரிவித்ததோடு இந்த பேரீத்தம் பழங்களை விடுவிப்பதற்கு அதிக வரி பணம் செலுத்தப்பட்டது குறித்து அரசின் சார்பில் கவலை தெரிவித்ததோடு எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெற மாட்டாது எனவும் உறுதி தெரிவித்து பேசியுள்ளார்.

50 மெட்ரிக் டன் பேரீத்தம் பழத்திற்காக வரி மற்றும் தாமதக் கட்டணமாக 32861109 ரூபா சுங்கத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்பு பேரீத்தம் பழங்களுக்கான வரி குறைக்கப்பட்டே பேரீத்தம் பழங்கள் விடுவிக்கப்படுகின்றன. இம்முறை திறைசேரியே இப் பணத்தை வழங்கியதாகவும் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இப்பணம் செலுத்தப்படவில்லை எனவும் முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது.

இதே நேரம் புனித ரமழானுக்காக தருவிக்கப்படும் பேரீத்தம் பழங்களுக்கு ஒரு ரூபா வரியை மட்டும் விதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்து வரிச்சலுகை வழங்கியுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் இப்போது வெளியாகியுள்ளது.

வழமையாக அரசாங்கம் வழங்கும் வரிச்சலுகையை இந்த அரசும் வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

ஏற்கனவே கூடுதலாக செலுத்தப்பட்ட வரியை மீண்டும் மீளச் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாத்தறை மாவட்டத்தின் அரசாங்கக் கட்சி உறுப்பினர் அர்கம் இல்யாஸ் புத்த சாசன மத விவகார கலாச்சார அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றின் மூலம் கேட்டுள்ளார். இதற்கு முன்பு நோன்பு காலத்தில் பல முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு பேரீத்தம் பழங்களை அனுப்பி வைப்பதை வழக்கமாக இருந்தது.

இப்போது சவுதி அரேபியாவும் ஈரான் இஸ்லாமிய குடியரசு மட்டுமே பேரீத்தம் பழங்களை அனுப்பி வைக்கின்றன.ஈரானின் பேரீத்தம் பழங்கள் கடந்த காலத்தில் தாமதமாக வந்திருந்தது. கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்று வந்த முஸ்லிம்களின் எதிர் செயற்பாடுகள் முஸ்லிம் நாடுகளில் நிலவும் நெருக்கடி காரணமாக பல நாடுகள் இலங்கைக்கு வழங்கும் இந்த உதவிகளை நிறுத்தி இருந்தது.

எனினும் சவுதி அரேபியா இலங்கைக்கு தொடர்ந்து பேரீத்தம் பழங்களை அனுப்பி வருகின்றது. சவுதி அரேபியாவின் இந்த மனிதாபிமான உதவியை வறிய நாடுகளில் வாழும் முஸ்லிம்களுக்கு தொடர்ந்து அனுப்பி வைப்பது பாராட்டிற்குரியது.

இம்முறை வழங்கப்பட்டுள்ள பேரீத்தம் பழம் ஒரு பள்ளிவாசலுக்கு 18 கிலோ வீதம் வழங்கப்பட உள்ளது. முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களம் இத் தொகையை அதிகரிப்பது குறித்து எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியமாகும்.

நோன்பு ஆரம்பிப்பதற்கு பல மாதங்களுக்கு முன்பே இந்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் இத் தொகையை அதிகரித்துக் கொள்ளலாம்.அதன் மூலம் கூடுதலான வறியவர்களுக்கு இந்த உதவியை வழங்க முடியும். சவுதி அரேபியா இலங்கைக்கு தொடர்ந்து பேரீத்தம் பழங்களை அனுப்பி வைக்கும் நாடாக திகழ்கின்றது.

# கொழும்பு மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலில் இடம்பெற்ற புனித மி:ராஜ் தின தேசிய நிகழ்வு






(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

1446 ஹிஜ்ரி ஆண்டுக்கான புனித மிஃராஜ் தின தேசிய நிகழ்வு (27) திங்கட்கிழமை இரவு கொழும்பு - 10, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலில் இரவு 7.45 மணி முதல் இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு -10, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுக்கு முஸ்லிம் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களான என்.நிலூபர், அலா அஹமட், கணக்காளர் முஹம்மட் நிப்ராஸ் உட்பட திணைக்கள அதிகாரிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.முப்தி, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசல் தலைவர் மௌலவி ஏ.சீ.எம். பர்ஸாத் உட்பட உலமாக்கள், அரச உயர் அதிகாரிகள், கொழும்பு பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் குழு உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் ஜமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தியதோடு, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலின் பிரதம இமாம் அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் (பௌசி) மிஹ்ராஜ் இரவின் முக்கியத்துவத்தைப்பற்றி பயான் நடாத்தினார்.

அத்தோடு, விசேட சிறப்பு பிரார்த்தனையை (துஆ) மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலின் பிரதம இமாம் காரி அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் நவவி நிகழ்த்தினார்.

கொழும்பு-10, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலின் தலைவர் மௌலவி ஏ.சீ.எம். பர்ஸாத் நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்தினார்.

புனித மிஃராஜ் தின இரவு நிகழ்வுகள் யாவும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நேரடி அஞ்சல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# புத்தளத்தில் "கைவண்ணம்" என்ற பெயரில் திறக்கப்பட்ட பெண்களின் உற்பத்தி பொருட்கள் விற்பனை நிலையம்





**(சியாஜ்,எம்.யூ.எம்.சனூன்)**

புத்தளம் பாலாவி முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கை யகம் ஏற்பாட்டில் "கைவண்ணம்" என்ற பெயரில் புத்தளத்தில் பெண்களால் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரிய உணவுகள் மற்றும் கைவினைப் பொருட்களின் விற்பனை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை (24) திறந்து வைக்கப்பட்டது.

முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜூவைரியா முஹைதீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதிகயாக முதலீட்டு அபிருத்தி சபையின் பணிப்பாளர் மதூரி ஏக்கநாயக்க கலந்து கொண்டு மேற்படி விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார் அத்தோடு புத்தளம் உதவி பிரதேச செயலாளர், கற்பிட்டி பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி அதிகாரி, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மகளீர் சங்கத்தின் தலைவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கைக்கான அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகராலயத்தின் நிதி உதவியுடன் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் டெப் வேலைத் திட்டத்தின் வாயிலாக பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட சுயதொழில் பயிற்சியின் மூலம் பெண்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சிறந்ததொரு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த விற்பனை நிலையம் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை பத்திரிகை பேரவையின் ஏற்பாட்டில் அனுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான ஊடக செயலமர்வு அனுராதபுரம் தேசிய பின் அறுவடை முகாமைத்துவ நிறுவனத்தில் (25) நடைபெற்றது. இதன்போது விரிவுரையாளர்கள் மற்றும் பத்திரிகை பேரவையின் ஆணையாளர் உரையாற்றுவதையும் ஊடகவியலாளர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

(படங்கள்:- எம்.ரீ.ஆரிப்)

# 45 ஆண்டுகளுக்குப் பின் அசறிகம பாடசாலையில், மாணவி ஹபீர் றிதா சித்தி

**(எம்.ரீ.ஆரிப்)**

கடந்த 23ம் திகதி வெளியாகிய 05 ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் அநுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட அசறிக்கம முஸ்லிம் வித்தியாலய வரலாற்றில் முதன் முறையாக றாசிக் என் ஹபீர் றிதா என்ற மாணவி சித்தியடைந்துள்ளார்.



அசறிக்கம முஸ்லிம் வித்தியாலய வரலாற்றில் 45 வருடங்களுக்கு பின்னர் றாசிக் என் ஹபீர் றிதா என்ற மாணவி 144 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பாடசாலைக்கும் கிராமத்திற்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ள இம்மாணவிக்கு அதிபர் ஏ.எம் .நியாஸ் உட்பட வகுப்பாசிரியர் எம்.ஏ.றியாஸ் முகமட் மேலதிக வழிகாட்டல் ஆசிரியர் ஏ.எம். றியாஸ் உள்ளிட்ட ஆசிரியர் குழாம் மற்றும் அசறிக்கம மக்களும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

# மர்ஹூம் அஷ்ரபின் ஒலுவில் இல்லம் தென்கிழக்கு பல்கலைக்கு நன்கொடை!



மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் ஒலுவில் இல்லம் தென்கிழக்கு பல்கலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் துணைவியார் பேரியல் அஷ்ரப் மற்றும் புதல்வர் அமான் அஷ்ரப் ஆகியோர் இணைந்து குறித்த நன்கொடையினை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் யூ.எல். அப்துல் மஜீட் இடம் கையளித்ததுடன் விரைவில் உரிமை மாற்றல் ஆவணங்கள் உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்கள் சித்தியடைந்து வரலாற்றுச் சாதனை



**(சியாஜ்,எம்.யூ.எம்.சனூன்)**

தற்போது வெளியாகியுள்ள தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புத்தளம் - தெற்கு கோட்டத்திற்கு உட்பட்ட புத்தளம் சமீரகம முஸ்லிம் வித்தியாலயத்தின் மாணவர்களான அப்துல் வஹாப் மொஹமட் பதீ 144 புள்ளிகள், மொஹமட் அசாம் அஸ்மா 143 புள்ளிகள் , அப்துல் ஜப்பார் முஆத் 141 புள்ளிகள், அஜ்மல் கான் அஹமட் 140 புள்ளிகள் என மாவட்ட வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று முதன்முறையாக நான்கு மாணவர்கள் சித்தியடைந்து 41 வருட பாடசாலை வரலாற்றில் சாதனை படைத்துள்ளதாகவும் அத்தோடு இவ் வருடம் முதன் முறையாக இப் பாடசாலையில் இருந்து க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்ற உள்ளதாகவும் பாடசாலையின் அதிபர் எம்.எம்.எம் மிஹ்ழார் (நளீமி) மேலும் தெரிவித்தார்.

அத்தோடு பாடசாலையில் இருந்து தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக் குத் தோற்றிய மாணவர்களில் 70 புள்ளிகளுக்கு மேல் 83.3 சதவீத சித்திகள் பெற்றுள்ளனர் எனவும் இம் மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு அச்சாணியாக தரம் 03 தொடக்கம் கடமையாற்றிய ஆசிரியர் திருமதி எம்.ஆர் ஹஸ்னா பேகம் ஆகியோருக்கு அதிபர் பாடசாலை நிர்வாகம், அபிவிருத்திக் குழு, பழைய மாணவர்கள் சார்பாக தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

# காத்தான்குடியில் முன்னெடுக்கப்பட்ட கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்



**(எம்.பஹத் ஜுனைட்)**

ஜனாதிபதியின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கு அமைய நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் பல் வேறு செயற்திட்டங்களின் தொடரில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை (25) காத்தான்குடி கடற்கரையில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தில் காத்தான்குடி கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்வு காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் கே.எம்.இக்பால் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிவில் சமூக சுற்றாடல் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஏ.எம்.எம்.ஜவாஹிர், பெருங் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ரஹீம் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுக்கள், உப குழுக்களின் உறுப்பினர்கள் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அறிவுத்தீபம் இமாம் ஷாபிஈ (ரஹ்)

**கலீபதுல் குலபா அல்-ஹாஜ்**
**மௌலவி**
**எம்.இஸட். முஹம்மத் பாரி**
**தலைவர்- மஜ்லிஸுல் உலமா**
**மற்றும்**
**அகில இலங்கை ஜம்இய்யதுல்**
**உலமா சபை- காலி**

இம்மாதம் 29ம் திகதி இமாம் ஷாபிஈ ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

***அறிவுத்தீபம் அரும் தவசீலர் ஆலிமு குறைஷ் இமாம் ஷாபிஈ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரி 150 ஆம் ஆண்டு ரஜப் மாதத்தில் காஸாப் பகுதியில் பிறந்தார்கள்.***

சுமார் 15 மாதங்களாக இஸ்ரேலிய தாக்குதல்களுக்கு உட்பட்டு சுமார் 46,707 பேரை இழந்து சுமார் 121,605 பேர் வரை காயப்பட்டு இறுதியில் காஸா மக்களுக்கு வெற்றி என்ற வகையில் 19ஃ01ஃ2025 இல் அமுலுக்கு வந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி வெற்றி வாகை சூடிய ஹமாஸ் போராளிகளும் காஸா மக்களும் ஒன்றாக குதூகலித்துக் கொண்டிருக்கும் காஸா பகுதியில் தான் இமாம் ஷாபிஈ ரலியல்லா/ஹ அவர்கள் பிறந்தார்கள்.

இயற்பெயர் புனைப்பெயர் குடும்பப் பெயர் எல்லாமாகச் சேர்ந்து அபூ அப்துல்லா முஹம்மத் பின் இத்ரீஸ் அல் ஷாபிஈ என்றே அவர்களின் பெயர் வழங்கப்படுகிறது. அவர்களின் பாட்டன்மார்களுள் மூன்றாமவராகிய ஷாபிஈ என்றவரின் பெயரோடு சேர்த்தே அவர்கள் ஷாபிஈ என வழங்கப்படுகின்றார்கள்.

அவர்களின் தாயார் பாத்திமா அல் அஸ்தியா ஷாபிஈ இமாம் அவர்களுக்கு இரண்டு வயதாகும் போதே தம் கணவரை இழந்து விதவையாவதோடு இமாம் அவர்களும் தகப்பன் இழந்த அனாதை ஆகின்றார்கள்.

தாயார் பாத்திமா அவர்கள் இமாம் ஷாபிஈ அவர்களைச் சுமந்து கர்ப்பிணியாக இருக்கும் போது ஒரு நாள் இரவு கனவில் தன் வயிற்றிலிருந்து "முஷ்தரி" போன்றதோர் ஒளிக்கிரகம் வெளிச்செல்லவும் விண்ணில் அதன் ஒளிக்கதிர்கள் நாலாப் பக்கங்களிலும் விரிந்து போகவும் கண்டார்கள். தாம் வயிற்றில்

சுமந்திருக்கும் குழந்தை பேரறிஞராக வந்து அரேபிய தீபகற்பத்தில் அல்லது உலகின் நாலா பகுதிகளிலும் அவர் அறிவை பரப்புவார் என்பதை இக்கனவு மூலமாக அறிந்து கொண்ட தாய் மறுமணம் முடித்து சுபீட்சமாய் வாழ்வதை ஒரு புறம் தள்ளி தாம் பெற்றெடுத்த

அரும் செல்வக் குழந்தையை பராமரித்து வளர்ப்பதிலேயே ஆர்வம் கொண்டார்கள். வறிய குடும்பத்தைச் சேர்ந்த தாயார் தம் வீட்டை அடகு வைத்து பணம் பெற்று தனது மகன் அறிவுடையோர் மத்தியில் சன்மார்க்கச் சூழலில் வாழ வேண்டும் என்ற நன்நோக்கோடு தம் உற்றார் உறவினர்கள் பலரும் வாழ்ந்த மக்கா நகருக்குச் சென்று கஃபாவின் பக்கமாக குடிசை கட்டி வாழ்ந்தார்கள்.

தமது மகன் முதலில் ஒரு அல்குர்ஆனை மனனம் செய்த ஹாபிஸாக வேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்தி இறை அருளால் அவர்கள் தமக்கு ஏழு வயதுகள் நிரம்பும் போதே ஹாபிஸாகி விட்டார்கள். அத்தோடு அம்பெறிதல் போன்ற பல கலைகளிலும் இளமையிலே பயிற்சி பெற்றார்கள்.அவர்கள் /ஹுதைல் கோத்திரத்தாரோடு சேர்ந்து வாழ்ந்ததால் அரபு கவிதைக் கலையை இயல்பாகவே கற்றுக்கொண்டார். தொடர்ந்து அப்போதைக்கு மக்காமா நகரின் ஆசிரியர்களிடம் கல்வி பயின்றார்கள். அவர்களுள் மக்காமா நகர நீதிபதி முஸ்லிம் பின் காலித் அல் ஸிஞ்சி, தாவூத் பின் அப்துல் ரஹ்மான் அல் அத்தார்.முஹம்மத் பின் அலி அஷ்ஷாபிஈ (ரஹிமஹு முல்லாஹ்) ஆகியோரிடம் கற்று தேர்ந்தார்கள். அரபு இலக்கணம், இலக்கியம், தப்ஸீர், ஹதீஸ், சட்டக்கலை போன்ற பல கலைகளில் ஹதீஸ் துறையிலும் சட்டத்துறையிலும் இமாம் அவர்களுக்கு பெரிய ஆர்வம் இருந்தது. தமக்கு 18 வயதாகும் போது அக்காலை பிரதான ஹதீஸ் கிரந்தமாக இருந்த மாலிக் இமாம் (ரஹிம/ஹுமுல்லாஹ்) அவர்களின் முவத்தாஃ என்ற ஹதீஸ் கிரந்தத்தையும் திறம்பட படித்து மனனமும் செய்து கொண்டார்கள்.

மக்காவில் கல்வி கற்கும் காலத்தில் ஒரு வறிய மாணவனாக இருந்த அவர்களிடம் சில ஆசிரியர்களுக்கான ஹதியாக்களை கொடுக்கப்

பணம் இல்லாததால் வகுப்புகளுக்கு வெளியே நின்று வகுப்புப் பாடங்களை அவதானித்து கற்றுக்கொண்டு கல்லுகளிலும் எலும்புகளிலும் பாடக் குறிப்புகளை பதிவு செய்து தமது குடிசை வீட்டில் இருந்ததோர் குடத்தில் பத்திரப்படுத்திய வரலாறும் உண்டு.

தனக்கு 18 வயது நிரம்பும் போதே அறிவிலும் ஆற்றலிலும் ஆளுமையிலும் சிறந்து விளங்கிய இமாம் அவர்களுக்கு ஆசிரியப் பெருமக்கள் சன்மார்க்கத் தீர்ப்புகள், பத்வாக்கள் வழங்கும் அனுமதியையும் அளித்திருந்தனர்.

தொட்டில் தொட்டு சவக்குழி வரை ஒருவர் கற்றாலும் உலகில், உலகின் அனைத்து அறிவுகளையும் ஒருவரால் கற்று முடிக்க முடியாது என்றதன்படி இமாம் அவர்கள் தொடர்ந்து தனது அறிவை மேம்படுத்திக் கொண்டிருந்தார்கள். மதீனமா நகரின் மாண்புமிகு மனிதர் பேரறிஞர் பெருமானார் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்களின் பாதம் தொட்ட புனித மதீனமா மண்ணை செருப்புகளால் மிதிக்கக்கூடாது என மதீனா பாலையில் வெட்ட வெளியிலும் கூட செருப்பணியாது சென்ற ஒரு புனிதர் இமாம் மாலிக் ரலியல்லாஹு அவர்களிடம் போய் கற்றுக்கொள்ள வேண்டும் என மதீனாப்பயணத்தை மேற்கொண்டு அன்னையாரின் அருள் பெற்று மாலிக் இமாம் அவர்களின் சபைக்குச் சென்றார்கள். காத்திருந்தார்கள். நாளைய தினம் முவத்தாஃ கிரந்தத்தை உமக்குச் சொல்லித் தர ஒருவரையும் கூட்டிவருமாறு பணிக்கப்பட்டார்கள். இல்லை முவத்தாஃவை தான் ஏற்கனவே மனனம் இட்டுள்ளேன் என்றதும் மறுநாள் வருமாறு சொல்ல மறுநாள் போய் இமாம் மாலிக் அவர்களின் கரம் பற்றி முவத்தாஃ கிரந்தத்தை வாசிக்க ஆரம்பித்தார்கள். தொடர்ந்து மனனமாகவே வாசித்துச் செல்வதை அவதானித்த இமாம் அவர்கள் பெரு மகிழ்ச்சியோடு மகனே அல்லாஹ்வின் அருள் உமக்கு கிடைத்திருக்கின்றது என்று பிரார்த்தித்து தன்னோடு அமர்த்திக் கொண்டார்கள். ஆமாம், சுமார் எட்டு வருடங்கள் இமாம் மாலிக் (ரலியல்லாஹு) அவர்களோடே

இருந்து தனது அறிவை மென்மேலும் மேம்படுத்திக் கொண்டார்கள். இமாம் அவர்களும் தனது மாணவர் ஷாபிஈ அவர்களை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து அறிவு புகட்டி இறுதியில் தமக்குப் பதிலாக மார்க்கத் தீர்ப்புகள் வழங்கும் நிலைக்கும் அவர்கள் வந்தார்கள். இமாம் மாலிக் ரலியல்லா/ஹ அவர்கள் வபாத்தாகும் வரையில் அவர்களோடு இருந்து மனப்பக்குவ மும், அறிவுத்தேர்ச்சியும் பெற்றார்கள்.

தொடர்ந்து இமாம் அவர்கள் யெமன் நாட்டுக்கு பயணமானார்கள். அங்கு அவர்கள் அப்பாஸிகளின் ஆட்சிக்காலத்தில் யெமனின் நீதிபதியாக நியமனம் பெற்று பல வருடங்கள் பிரதம நீதிபதியாக கடமையாற்றினார்கள். அப்போது அவர்களுக்கு பல அரசியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வந்தது.

மன்னர் ஹாரூன் ரசீதின் அரண்மனைக்கு அழைக்கப்பட்டு சுமத்தப்பட்ட குற்றங்கள் பற்றி நடைபெற்ற விசாரணையில் நிரபராதியாக வெளிவந்த இமாமவர்கள் தொடர்ந்தும் அப் பதவியில் இருக்க விரும்பவில்லை.

ஹிஜ்ரி 184 இல் பக்தாத் நோக்கிப் பயணமானார்கள். அங்கு பக்தாதின் நீதிபதியாக விளங்கிய செய்கு முஹம்மத் பின் அல்ஹஸன் அல் சைபானி (ரலியல்லா/ஹ அன்/ஹ) அவர்களிடம் இஸ்லாமிய சட்ட துறையை மென்மேலும் கற்றுத் தேர்ந்தார்கள். அப்போதைக்கு பக்தாத் நாட்டில் இமாமுனா அபூ ஹனீபா(ரலியல்லா/ஹ அன்/ஹ) அவர்களின் ஹனபிஈ சன்மார்க்க சட்ட திட்டங்களே அமுலில் இருந்தது.

மதீனா சென்று இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அவர்களிடம் மாலிக் மத்ஹப் சட்ட திட்டங்கள் என்ற ஹிஜாஸின் சட்ட அறிவு பக்தாதில் அபூ ஹனீபா அவர்களின் ஹனபிஈ சட்டக்கலை என இரு பெரும் சட்ட வல்லுனர்களின் சட்ட வாக்கு முறைகளை எல்லாம் கற்றுத் தேர்ந்தார்கள்.

தொடர்ந்து இமாம் அவர்கள் மக்காவுக்கு வந்து சுமார் ஒன்பது வருடங்களாக மக்கமா நகரின் கஃபா ஷரீபில் ஹதீஸ் துறை, சட்டத்துறைகளில் மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தி வந்தார்கள். ஆயிரக்கணக்கான பல நாடுகளையும் சேர்ந்த உலமாக்கள் அவர்களிடம் கற்றுத் தேர்ந்தார்கள்.

பின்பு திரும்பவும் ஹிஜ்ரி 195 ல் பக்தாத் சென்றார்கள்.இப்படி அவர்கள் மக்கா மதீனா யெமன் பக்தாத் போன்ற பல அரபு நாடுகளிலும் ஒரு முக்கிய சன்மார்க்கப் பேரறிஞராக திகழ்ந்தார்கள். முதல் முறை பக்தாதில் இருக்கும்போது அவர்கள் வெளியிட்ட பத்வாக்கள் அல் கவ்லுல் கதீம் எனவும் பிந்திய காலங்களில் கொடுத்த பத்வாக்கள் அல் கவ்லுல் ஜதீத் எனவும் வழங்கப்படுகின்றது.

இமாம் ஷாபிஈ ரலியல்லா/ஹ அவர்களின் சன்மார்க்க பணிகளுள் அதிமுக்கியமானது அவர்கள் தொகுத்தளித்த சன்மார்க்க சட்டவாக்க அடிப்படைகள் அடங்கிய அர் ரிஸாலா என்ற நூலாகும். இந் நூலில் இஸ்லாமிய சட்டவாக்கத்தின் அடிப்படைகள் யாவை , சரீஆவின் நோக்கங்கள் (மகாஸிதுஷ்ஷரீஆ) முதல் மூலாதாரமாகிய அல்குர்ஆனின் ஆயத்துக்களில் முதஷாபிஹான ஆயத்துகளை எவ்வாறு அணுகுவது மன்சூஹான ஆயத்துக்களை அணுகும்முறைகள் சட்டவாக்கத்தின் இரண்டாம் மூலாதாரமாகிய சுன்னாவுக்கான அணுகுமுறைகள் எவ்வாறு இன்னோரன்ன விபரங்கள் தொகுக்கப்பட்டு இஸ்லாமிய சட்டவாக்க கலைக்கே அடிப்படைகளை நிறுவினார்கள். அன்று முதல் இமாம் அவர்களின் இந்த நூலின் கோட்பாடுகளையே இஸ்லாமிய சட்டவாக்க கோட்பாடுகளாக இஸ்லாமிய உலகம் கையாண்டு வருகின்றது.

இரண்டாவது முறை பக்தாத்தில் இமாம் அவர்கள் வாழ்ந்த காலை, மன்னர் மஃமூன் பதவியேற்றார்.இவர் முஃதஸிலா கொள்கைகளால் ஈர்க்கப்பட்டிருந்தார். இவரின் ஆட்சிக் காலத்தில் பக்தாதில் முஃதஸிலா கொள்கையினரே அரச பதவிகளில் அமர்த்தபட்டனர். பகுத்தறிவிற்கு முதலிடம் கொடுத்து அல்குர்ஆனின் ஆயத்துக்களை கூட புறம் தள்ளி தத்துவ சாஸ்திரத்துக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. முஃதஸிலா கோட்பாடுகளை முற்றிலும் புறக்கணித்த போதும் அறிவுத்தீபமாக திகழ்ந்த இமாம் ஷாபிஈ அவர்கள் பக்தாத்தின் நீதிபதியாக பதவியேற்க பணிக்கப்பட்டார்கள். ஆனால் உடன்படவில்லை.



அக்கால பக்தாத் நகரம் இஸ்லாமிய அறிவு ஆய்வுத் துறைகளில் மிக முன்னேற்றமடைந்திருந்த போதிலும் ஆட்சியாளர்கள் கூட அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்ற கோட்பாட்டை ஏற்று செயல் பட்டதால் தொடர்ந்தும் பக்தாத்தில் வாழ விரும்பாத இமாம் அவர்கள் எகிப்து நோக்கி புறப்பட்டார்கள்.

உலமாப் பெருமக்களின் அமோக வரவேற்பு வழங்கப்பட்டு கௌரவமும் கண்ணியமும் பொருந்திய பெருமகனாக இமாம் அவர்கள் தமது வாழ்வின் இறுதிப் பகுதியை எகிப்தில் கழித்தார்கள்.

நபிகள் நாயகம் ஸல்லல்லா/ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை துறந்து மதீனா சென்று மதீனாவில் தனது கோத்திரத்தை சேர்ந்த பனூன் நஜ்ஜார்களோடு சேர்ந்து வாழ்ந்தது போல இமாம் ஷாபிஈ அவர்களும் எகிப்தில் தமது கோத்திரப் பெருமக்களோடு வாழ்ந்தார்கள்.

மக்கா மதீனா வாழ்க்கையில் தாம் கற்று தேர்ந்த ஹிஜாசிய பிக்/ஹ ஞானம் யெமன் பக்தாத் வாழ்வில் தான் கற்றுத் தேர்ந்த ஹனபி மத்ஹப் பிக்/ஹ இரண்டும் அல்லாத ஷாபிஈ சட்டத் தொகுப்பை அறிமுகம் செய்தார்கள்.

இஸ்லாமிய உலகில் இன்று ஹனபி மாலிகி ஷாபிஈ ஹன்பலி என்ற நான்கு சட்டத் தொகுப்புகள் அல்லது மத்ஹபுகள் இருந்த போதும் ஷாபி மத்ஹபே பெரும்பாலான முஸ்லிம்களால் உலக நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

தற்கால இஸ்லாமிய உலகின் தலைசிறந்த சர்வ கலாசாலையாகிய எகிப்து அல் அஸ்ஹர் சர்வ கலாசாலையில் வெவ்வேறாக நான்கு சட்டத் தொகுப்புகளும் போதிக்கப்படுவது போல மத்ஹபுகளுக்கிடையில் முகாரனா மைஸஸ் மதாஹிப் கலையும் போதிக்கப்படுகின்றது.

இமாம் ஷாபிஈ ரலியல்லாஹு அவர்களின் ஷாபி மத்ஹபின் அடிப்படை நூலாக இருப்பது "அல் உம்மு" என்ற சட்ட நூலாகும்.இந்த நூலின் அடிப்படையில் முக்தசருள்முஸ்னி, இமாமுல் ஹரமைன் அபுல் மஆலி ரஹ்மதுல்லாஹ் அவர்களின் நிஹாயா, இமாமுனா கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹ் அவர்களின் வசீத் பசீத் வஜீஸ் ஆகிய நூல்கள் ராபிஈ இமாம் ரஹ்மதுல்லாஹ் அவர்களின் முஹர்ரர் தொடர்ந்து இமாம் நவவி ரஹ்மதுல்லாஹ் அவர்களின் மின்ஹாஜ், நிஹாயா, அல் மஜ்மூஉ, துஹ்பா இன்னும் பல ஷாபி மத்ஹபுக்குரிய சட்ட நூல்கள் தொகுக்கப்பட்டன. இவற்றுள் ஒரு சில நூல்களே எமது அரபுக் கல்லூரிகளின் பாடத்திட்டங்களிலும் அடங்கியுள்ளது.

ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டு முதல் இலங்கையின் இஸ்லாமிய சமூகத்தை வழிநடாத்தியது போன்று சன்மார்க்க கல்விக்கு வலுவூட்ட வெளிநாடுகளில் இருந்து சமூகம் தந்த அறிஞர்களுள் பெரும்பாலானவர்கள் ஷாபிஈ மத்ஹபை சார்ந்தோர்கள் ஆதலால் இலங்கையில் இஸ்லாம் ஷாபி மத்ஹப் அடிப்படையிலேயே தொன்று தொட்டு போதிக்கப்பட்டு வருகின்றது. சுதந்திரத்திற்கு முந்திய இலங்கையின் காலனித்துவ ஆட்சியிலும் கூட நடைமுறையிலிருந்த "முஹம்மதன் லோ" ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்திருந்தது. தொடர்ந்து ஒல்லாந்தர்களின் ஆட்சியிலும் ஆங்கிலேய ஆட்சியிலும் முஸ்லிம் விவாக, விவாகரத்து,

சொத்துரிமை, வக்பு சட்டங்கள் யாவும் ஷாபிஈ மத்ஹபின் அடிப்படையில் அமைந்திருந்தமைக்கு வரலாறு சான்று பகர்கின்றது. இன்றும் அவ்வாறே இருக்கின்றது.

முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனமான அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை காலி மாநகரில் 1924 இல் ஷாபி மத்ஹபைச் சார்ந்த உலமாக்களால் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த ஸ்தாபனத்தின் முக்கிய நிறுவினராக மர்/ஹூம் அப்துல் சமது ஆலிம் அவர்களின் இலங்கை முஸ்லிமின் மத்ஹப் எனும் நூலில் அவர்கள் ஷாபி மத்ஹபை

தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...

# அதிரடிக் கைதுகளால் அதிரும் அரசியல் களம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

முன்னாள் ஜனாதிபதியின் புதல்வரான யோசித ராஜபக்ஷ நிதி மோசடி தடுப்பு குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2025.01.25 ஆம் திகதி கைது செய்யப்பட்டு 27 ஆம் திகதி வரையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். குற்றத்தடுப்பு பிரிவு திணைக்கள அதிகாரிகளால் அவர் பெலியத்தை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டு அன்றைய தினமே மன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தடுப்புக்காவலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் திருமதி பவித்ரா சஞ்சீவனி பதிராஜா உத்தரவிட்டார். கதிர்காம பிரதேசத்தில் கொள்வனவு செய்துள்ள காணி தொடர்பாக 2025 ஜனவரி 03 ஆம் திகதி குற்றத் தடுப்பு திணைக்கள அதிகாரிகள் யோசித ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர். அதன் தொடராகவே இந்த கைதும் தடுத்து வைத்தலும் இடம்பெற்றிருக்கின்றது.

ஆனாலும் 2011 ஆம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக யோசித 2016 ஆம் ஆண்டு நல்லாட்சி காலப்பகுதியிலும் ஒன்றரை மாதங்கள் அளவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அக்காலப்பகுதியில் சீ.எஸ். என். தொலைக்காட்சி அலைவரிசையை நிறுவுவதற்காக செலவு செய்த 23 கோடி ரூபா தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் கடுவெல மாஜிஸ்ரேட் தம்மிக ஹேமபாலவின் உத்தரவின் பேரில் யோசித ராஜபக்ஷவால் அவரது நெருங்கிய உறவினர்களுள் ஒருவரான ரொஹான் வெலிவிடவின் வங்கி கணக்கிற்கு வைப்பு செய்யப்பட்டிருந்த 15 கோடி 85 இலட்சம் ரூபா நிதியை அரச உடமையாக்கி இலங்கை மத்திய வங்கியின் சொத்தாக்க உத்தரவிடப்பட்டது. இந்தளவு பணம் இவருக்கு எங்கிருந்து வந்தது என்ற கேள்விகளுக்கு பதில் கொடுக்க முடியாததாலேயே நிதி மோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் இவ்வாறான கைதும் சட்ட நடவடிக்கையும் இடம்பெறுகின்றது.

அதே வழக்குகளின் தொடராகவே பழைய கோர்வைகள் (பைல்கள்) மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு புதிய வடிவத்தில் விசாரணைகள் செய்யப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பம் இந்நாட்டின் பிரமாண்டமான அரசியல் பின்புலத்தை கொண்ட குடும்பமாகும். அத்தகைய குடும்பத்தின் வாரிசுகளில் ஒருவரே யோசித ஆவார். அவ்வாறாயின் புதிதாக மேலும் அடிபட்டிருந்த 11 பைல்கள் மீண்டும் மேலுக்கு கொண்டுவரப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு முன்னாள் அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் பெரும் புள்ளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது.

அது தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தெரிவிக்கையில் பொலீசாரிடம் 29000 பைல்கள் இருப்பதாகவும் அவற்றில் மூடப்பட்ட நிலையில் இருந்தவைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது. அதற்காக தேவையாக அறிவுரைகளை பெற பொலீஸ் திணைக்களம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்திருக்கின்றது. அவற்றில் ஊழல், நிதி மோசடிகள், முறைகேடாக சொத்து சேகரித்தமை, கொலை, கையாடல்கள் தொடர்பான வழக்குகள் உள்ளன. அவை கடந்த ஆட்சி காலப்பகுதியில் விசாரணை செய்யப்படாமல் தேக்கம் அடைந்து அல்லது புரம் தள்ளப்பட்டிருந்தவைகளாகும்.

கடந்த ஆட்சி காலப்பகுதியில் நாட்டில் ஊழல்கள் மலிந்து காணப்பட்டதே தவிர அவற்றை தடுக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்க வேண்டிய ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் இணைந்தே நிதி மற்றும் பொதுச் சொத்து மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர்.

முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் விசாரணைகள் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கவில்லை. ஒன்றில் நீதிச் சுதந்திரம் முடங்கியதாக இருந்தது. அல்லது விசாரணை செய்யக்கூடிய நேர்மையான அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டு இலஞ்சம் ஊழல்கள் தொடர்பான முறைப்பாடுகளின் போது விசாரணை செய்யும் ஆணைக்குழு செயலற்றதாக இருந்திருக்கின்றது.

அதே நேரம் சில அரசியல்வாதிகள், அதிகாரி கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாதபடி அரசியல் அழுத்தம் மேலோங்கி இருந்தது. அதனால் நாட்டில் ஊழல் கொடிகட்டிப் பறந்தது எனலாம்.

ஆனால் இனி அந்த ஆட்டம் ஆட முடியாது என்பது வெளிப்படையாக தெரிய ஆரம்பித்திருக்கின்றது. அதனால் புதிய 11 கோர்வைகள் (பைல்கள்) மீண்டும் வெளியே போடப்பட்டால் யார் யார் நீதிமன்றம் ஏறி இறங்க வேண்டிய நிலை ஏற்படுமோ தெரியாது. யார் யார் வெலிக்கட செல்லும் நிலை ஏற்படுமோ தெரியாது. யாராக இருந்தாலும் அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதியின்படி வெளிப்படையாக நடந்துகொள்ள வேண்டும். அதிலும் வெறும் அரசியல் நாடகமாக இத்தகைய கைதுகள், நீதிமன்ற செயற்பாடுகள் இருக்கக் கூடாது. மக்களுக்கு பூச்சாண்டி காட்டுவதற்காக இவை இருக்கக்கூடாது. ஒருவர் ஊழலில் அல்லது நிதி மோசடியில் ஈடுபட்டார் என்பதை நிரூபிப்பதற்காக போதிய சாட்சியங்கள் இருக்குமானால் பாரபட்சமற்ற முறையில் சுயாதீனமான விசாரணை நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

கடந்த 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி நிலவிய காலம் முதல் 2019 ஆண்டு வரையான காலப் பகுதியில் இத்த கைய ஏராள மான மோசடிகள் இடம் பெற்றிருக்கின்றன.

அதில் ஒரு குற்றச் சாட்டே முன்னாள் சுகாதார அமைச்சராக இருந்த கெஹெலிய ரம்புக்வெல்ல மருந்து வகைகளை கொள்வனவு செய்வதில் மேற்கொண்ட ஊழல்கள் காரணமாக அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டது. அதன் காரணமாக தற்போது சிறை வாசம் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டி ருக்கின்றது.

இந்த ஊழல்கள் அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தாபய ராஜபக்ஷ காலம் முதல் இருந்து வருகின்றன. முன்னைய ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிரிசேனா 2015 நல்லாட்சி நிலவிய காலப்பகுதியில் தன்னிடம் மஹிந்த கால ஊழல் பற்றிய அரசியல்வாதிகளது 30 பைல்கள் இருப்பதாக கூறி வந்தார்.

அதே நேரம் மத்திய வங்கி பிணை முறி தொடர்பான 1300 கோடி ரூபா ஊழல் பற்றியும் கடுமையான முறையில் பேசப் பட்டது.

அதனால் இத்தகைய ஊழல்கள் மலிந்து காணப்பட்டமையும் அவை தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்காக பகிரங்கமாக அரசியல் மேடைகளில் பேசி வந்தமை, நடவடிக்கை எடுப்பது மற்றும் சம்பந்தப்பட்டவர்களை தண்டிப்பது என்ற வாக்குறுதி ஆகியன அக்கட்சியின் அபரிமிதமான வெற்றிக்கு காரணமாக அமைந்தது. அதனால் இனி வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கான கால அவகாசம் கிடைத்திருப்பதால் ஜனாதிபதியால் கூறிப்பட்ட பொலீஸ் திணைக்களத்தில் முடங்கி இருக்கின்ற 29000 பைல்களும் வெளியே எடுக்கப்பட வேண்டிய தருணம் இதுவாகும்.





# கண்டியில் சமூக நல்லிணக்கத்துக்காக பங்காற்றியவர் ஜெம் லைட் ஏ.எம்.இஸ்மாயில் ஹாஜி

## பாகிஸ்தான் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார் புகழாரம்

(இக்பால் அலி)

கண்டியில் சமூக நல்லிணக்கத்திற்காக ஒரு பெரிய பணியில் ஈடுபட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய பல்லின மக்களிடையே ஒரு மகாத்மானாகவும் ஒரு சரித்திர புருஷராகவும் வாழ்ந்தவர்தான் கண்டி ஜெம் லைட் ஏ. எம். இஸ்மாயில் ஹாஜியார். அவருடைய எண்ணம், செயல், நினைவு ஆகிய சகல அம்சங்களும் ஒரு திருப்புமுனையாகவே இருந்துள்ளது. என்று பாக்கிஸ்தான் நாட்டு விதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார் தெரிவித்தார்.

கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கண்டியில் கடந்த 50 வருட காலமாக சமூகப் பணி புரிந்து வந்த வர்த்தகப் பிரமுகர்





மறைந்த கண்டி ஜெம். லைட் ஏ. எம். இஸ்மாயில் ஹாஜியாரின் நினைவேந்தல் நிகழ்வு கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் அதன் தலைவர் எம். சலீம்டீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாக்கிஸ்தான் நாட்டு வதிவிடப் பிரதிநிதி அபல்சல் மரைக்கார் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு பேச்சாளராக கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் உப தலைவர் ஏ. சி. எம். ரஹ்மான், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் உமர்தீன் ஆகியோர் உரை நிகழ்த்தினர் மேலும் சிங்கள், தமிழ். முஸ்லிம் வர்த்தக சங்கங்களின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் மத்திய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் மற்றும் கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் செயலாளர் எம். வை. அஹமட் அல் ரஷீட் உள்ளிட்டவர்கள் மற்றும் கண்டி ஜெம் லைட் ஏ. எம்.இஸ்மாயில் ஹாஜியார். அவர்களுடைய குடும்பத்தினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாழைச்சேனை இந்து கனிஷ்ட பாடசாலை மட்டக்களப்பு மாவட்டத்தில் வரலாற்று சாதனை

(எஸ்.எம்.எம். முர்ஷித்)

தற்போது வெளியாகியுள்ள தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வாழைச்சேனை இந்து கனிஷ்ட பாடசாலை மட்டக்களப்பு மாவட்டத்தில் வரலாற்று சாதனை படைத்துள்ள தாக பாடசாலை பிரதி அதிபர் வனித்தா தியாகராஜா தெரிவித்தார்.

வாழைச்சேனை இந்து கனிஷ்ட பாடசாலை மாணவி ஜோர்ச் ரோஷலினா 180 புள்ளிகளைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்று பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும், கல்குடா வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். அத்தோடு பாடசாலையில் வெட்டு புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்று 26 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். எனவே சித்தி பெற்ற மாணவர்களுக்கும் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் பாடசாலை சார்பாக நன்றியையும் வாழ்த்துகளையும் பாடசாலை பிரதி அதிபர் வனித்தா தியாகராஜா தெரிவித்தார்

# கலாநிதி அரபாத் கரீமுக்கு ஜாமியா நளீமிய்யாவில் கௌரவம்

(பீ.எம் முக்தார்)

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.ஜே.எம் அரபாத் கரீமை கௌரவிக்கும் நிகழ்வு கலாபீட பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அண்மையில் (26) நடைபெற்றது.

ராபிதத்துன் நளீமிய்யீன் பேருவளை வலய ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவுக்கு கலாபீட முதல்வர் அஷ்ஷெய்ஹ் ஏ.ஸீ அகார் முஹம்மத் (நளீமி) தலைமை வகித்தார்.

ராபிதத்துன் நளீமிய்யீன் பேருவளை வலய தலைவரும், விஸ்டம் சர்வதேச பாடசாலையின் முகாமைத்துவ தலைவருமான அஷ்ஷெய்ஹ் பௌஸர் ஹுஸைன் (நளீமி) வரவேற்புரை நிகழ்த்தினார்.

மலேசிய இஸ்லாமிய பல்கலைக் கழகத்தில் அண்மையில் கலாநிதி பட்டம் பெற்றதை முன்னிட்டு இந்த கௌரவிப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டதுடன் நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

ஜாமியா நளீமிய்யா கலாபீட தலைவர் அல்-ஹாஜ் யாகூத் நளீம் உட்பட நிர்வாகிகள், விரிவுரையாளர் கள், மாணவர்கள், சீனன்கோட்டை



பள்ளிச் சங்க தலைவர் எச்.எம் முக்தார் ஹாஜியார், இணைச் செயலாளர்களான எம்.எம்.எம் சிஹாப் ஹாஜியார், ரம்லான் அஷ்ரூஸ் இணைப் பொருளாளர் ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியார் உட்பட உறுப்பினர்கள், ராபிதத்துன் நளீமிய்யீன் பேருவளை வலய உறுப்பினர்கள் உட்பட புத்திஜீவிகள், உலமாக்கள், பிரமுகர்கள் என பலரும் பங்கு பற்றினர்.

# புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புலமையாளர்கள் கௌரவிப்பு



(சியாஜ்.எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் தெற்கு கோட்டத்துக்குட் பட்ட கனமூலை முஸ்லிம் மகா வித்யாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மூன்று மாணவர்களான முஹம்மத் சிபான் அன்ஸிப் அஹமட் 147 புள்ளிகள், றபியுதீன் முஹம்மத் றிபாஹ் 144 புள்ளிகள், முஹம்மத் முபீன் சபியா 143 புள்ளிகள் உட்பட பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலையின் அதிபர் பீ.எம். முஸ்னி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான புத்தகப் பொதிகள் சித்திபெற்ற மாணவர்களுக்கான புத்தகப் பொதிகளுடன், பணப்பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர், உப அதிபர் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எம். இஸ்வான் உட்பட உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க செயலாளர் எம். என். எம். நிப்ரான் உட்பட அதன் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

# ஜே.எம்.ஜே மீடியாவினால் நடாத்தப்பட்ட டெலண்ட் ஷோ போட்டி நிகழ்ச்சி



ஜே.எம்.ஜே மீடியா நிறுவனத்தின் ஏற்பாட்டில் உலகம் முழுவதிலு முள்ள உறுப்பினர்களுக்கு இடையிலான "டெலன்ட் சோ" நிகழ்வு வெற்றி கரமான இடம்பெற்றது.

ஜே.எம்.ஜே மீடியாவானது சமூகத்திற்கு தேவையான பல விடயங்களை முன்னெடுத்து செய்து வருகின்றது அந்த வகையில் ஜனவரி மாதம் ஆரம்பம் முதல் இறுதிவரை எடுக்கப்பட்ட முன்னெடுப்பானது இலை மறை காய்களாக இருக்கும் அனைவரது திறமைகளையும் உலகரியச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வு நிறுவன பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் தலையின் கீழ் வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிறுவனத்தைச் சார்ந்த உலக நாடுகளில் உள்ள அனைத்து ஒருங்கிணைப்பாளர்கள் மூலமும் நடத்தப்பட்டது. அந்தவகையில் இந்த நிகழ்வில் உலக நாடுகளில் உள்ள அனைவரும் வயது வித்தியாசம் இன்றி கலந்து கொண்டனர். ஒவ்வோருவரும் தனது தனித்திறமைகளை கோலம் போடுதல், சித்திர்ம வரைதல், பாட்டுப் பாடுதல், நடனம் ஆடுதல் மற்றும் கைவண்ணங்களை செய்தல் என்று பலவகையிலும் வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாத்தளையின் பள்ளி நிர்வாகிகளுக்கு நியமனக் கடிதம்



(உக்குவல நிருபர்)

மாத்தளை மாவட்ட முஸ்லிம் கலாசார அபிவிருத்தி அதிகாரி எம்.ஜிப்ரியின் வேண்டுதலில் மாத்தளை மாவட்டத்தில் எலமல்பொத்த ஜும்ஆ மஸ்ஜித் உட்பட மூன்று தக்கியாக்கள், நிக்ககொல்ல ரஹீமியா மஸ்ஜித், உக்குவளை பரகஹவெல ஆயிஷா மஸ்ஜித் ஆகியனவற்றுக்கான தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளுக்கான நியமனக் கடிதங்களும் கல்லோயா தக்கியாவுக்கான பதிவு சான்றும் மாத்தளை மேலதிக செயலாளர் ரிஸ்லாவினால் வழங்கி வைக்கப் பட்டது. இதன்போது மாத்தளை மாவட்ட மஸ்ஜிதுகள் சம்மேளனத் தலைவர் தேசபந்து அல்ஹாஜ் முஹ்தார் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட நிர்வாகி களும் கலந்துகொண்டனர்.

# ஜனாஸா நலன்புரி அமைப்பின் முதலாவது மாபெரும் இரத்ததான முகாம்





(எம்.பஹத் ஜுனைட்)

காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் முதலாவது இரத்ததான முகாம் (26) காத்தான்குடி 01 பதுரிய்யா ஜும்மா பள்ளிவாயலில் நடைபெற்றது. காத்தான்குடி தள வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் அலிமா ரஹ்மான் மேற்பார்வையில் இடம் பெற்ற இவ் இரத்ததான முகாமில் பெருந்திரலான மக்கள் கலந்து கொண்டு இம் மனிதம் காக்கும் மனிதநேய பணியில் இணைந்து இரத்தத்தை தானம் செய்தனர்.

காத்தான்குடி தள வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் நாளுக்கு நாள் இரத்த தேவைகள் ஏற்படுவதால் அதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் இவ் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய சமூக பணி வரலாறு...

ஐரோப்பிய சமூகப் பணி (European Social Work) என்பது சமூக சேவையின் மேம்பாட்டையும், சமூக நீதியின் முன்னேற்றத்தையும் நோக்கி செய்யப்படும் பணிகளை குறிக்கின்றது. இதன் வரலாறு முக்கியமான மாற்றங்களைக் கொண்டுள்ளது.

*1. சமய தலையீடுகள். (1200-1500)*

*2. தேவாலயமும் அரசாங்கமும் (1500-1600)*

*3. வறுமைக்குட்பட்ட வர்களுக்கான சட்டம்*

*4. (1600-1800) குடியேற்றம் (1800-1900)*

*5. தொழில்வான்மையாக்கம் (1900)*

**1. சமய தலையீடுகள். (1200-1500)**

அயர்லாந்து, வேல்ஸ், இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து போன்ற நாடுகளை குறிக்கும். 1200 ம் ஆண்டுகளுக்கு முன்னர் பாதிக்கப்பட்டவர்களை இறைவன் கொடுத்த தண்டனையாக கருதி ஒதுக்கி வைத்தார்கள். தேவாலயங்கள் உணவு, மருத்துவம், வீடு போன்றவற்றை வறுமைக்குட்பட்டவர்களுக்காகவும், வீடற்றவர்களுக்காகவும், தேவையுடையவர்களுக்காகவும் (அநாதை, கர்ப்பவதிகள்) வழங்கினார்கள். மனிதாபிமானத்தின் சேவையாகவும், புண்ணியத்திற்கான சேவையாகவும் முன்னெடுத்திருந்தார்கள். 3ம் எட்வர்ட் மன்னன் "status of labourers" 1349 law பணியாற்றக் கூடிய வறுமைப்பட்டவர்கள் பாணிற்காக பணியாற்றுதல்.

**2.தேவாலமும் அரசாங்கமும் (1500 1600)**

தேவாலயங்கள் மக்களுக்கு உதவி செய்வதனால் தேவாலயங்களை மக்கள் உயர்ந்த இடமாக கருதியதால் அரசாங்கம் தலையீடு செய்வதன் மூலம் தேவாலயங்களில் முக்கியத்துவத்தை குறைத்துக் கொண்டது. - 1531 status henry 8ம் law சேவை செய்ய இயலாதவர்கள் யாசகம் செய்வதற்கான அனுமதியை வழங்கியது.

- 1536 சட்டம் தண்டனைச் சட்டம் - Punishment of Study Vagabond and beggars

வேலை செய்ய இயலுமானவர்கள் யாசகம் செய்வதற்காக தண்டனை சட்டம்.

- 1563 பாராளுமன்றம் சுழற்சி முறையில் அனைத்து வீடுகளிலும் வறுமைக்குட்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டத்தை முன்வைத்தது - 1572 எலிசபெத் மகாராணி வறுமைப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான வரிச் சட்டம்.





**3.வறுமைப்பட்டவர்களுக்கான சட்டம் (1600-1800)**

எலிசபெத்தின் வறுமைப்பட்டவர்களுக்கான சட்டம் (தங்கி வாழும் சிறார்கள், பணியாற்றுவதற்கான இயலுமையுடைய வறுமைப்பட்டவர்கள்) முக்கியமான வறுமைபட்டவர்கள்). வேலை செய்ய இயலுமானவர்களுக்கு வேலைகளை அரசாங்கம் வழங்கியது. வேலை செய்ய இயலுமான சோம்பேறித்தனமானவர்களுக்கு தண்டனையளித்தல். வேலை செய்ய இயலாதவர்களுக்கு வீடுகளில் தங்கி வைத்து பராமரித்தல். தேவாலயங்கள் வரி வசூலிப்பதன் மூலம் வறுமைப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தினார்கள். இதனை மு.ளு.ஊ அமைப்பு மூலம் முறைப்படுத்தினார்கள். தேவாலயங்கள் வேலை செய்ய கூடியவர்களுக்கு வேலையை ஏற்படுத்திக் கொடுப்பதும் வேலை செய்ய இயலாதவர்களுக்கு பராமரிப்பு வசதிகளை ஏற்படுத்தினார்கள்.

**4.குடியேற்றம் (1800-1900)**

அடம் சிமித் எலிசபெத் வறுமைச் சட்டம் மக்களை தங்கி வாழும் மனோநிலைக்கு

உள்ளாக்குகிறது என்பதை குற்றச்சாட்டாக முன் வைத்தனர். தோமஸ் ஆர் மல்துசன் எலிசபெத் வறுமைச் சட்டம் காரணமாக குழந்தைகள் பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. வரிச் சுமை அதிக்கிறது என்பதை முன் வைத்தார்.

- 1832 ம் ஆண்டு றோயல் கமிசன் எலிசபெத் வறுமை சட்டத்தை மீளாய்வு செய்ய அமைக்கப்படுகிறது. - 1833ம் ஆண்டு தொழிலாளர் சட்டத்தை கொண்டு வருகிறார்கள்.

- 1869 ம் ஆண்டு வறுமைப்பட்டவர்களை பராமரிப்பதற்கான அமைப்பு ஆரம்பிக்கப்படுகிறது. கனான் சமல் ஒகஸ்ரஸ் இனால் "settlement movement" மூலம் மக்களின் அடிப்படை பிரச்சிணைகளை தீர்ப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. - 1899 ம் ஆண்டு தொழில்வான்மையான சமூகப் பணி பயிற்சி வழங்கப்பட்டது.

**5. தொழில்வான்மையாக்கம் (1900)**

**1905**

-வறுமைப்பட்டோருக்கான ஆணையம் - வேலையற்றவர்களுக்கான. ஓய்வூதியம், பொதுச் சேவை ஓய்வூதியம்.

- 1906 - உணவு வழங்கல் சட்டம் - பாடசாலை மாணவர்களுக்கான இலவச மருத்துவ காப்புறுதி.

- 1911 - காப்புறுதி சட்டம் - குறைந்த வருமானம் உடையவர்களுக்கான மருத்துவ காப்புறுதி.

1925 - முதியோர்களுக்கான ஒய்வூதியம்.

- 1941 - பேவரி ஆணையம் - சமூக காப்புறுதி, பொது உதவித் தொகை.

- 1944 - மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில்வாய்ப்பு சட்டம்.

இவற்றின் மையமான நோக்கம் சமூக நலன் மற்றும் சமுதாயத்தின் நீண்டகால வளர்ச்சியாகும்.

**எச்.எப்.அப்ரா**
**முதலாம் வருட மாணவி, கலாவெவ,**
**சமூகப்பணி இளங்கலைமானி சிறப்புப்பட்டம் (2023/2024)**
**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**




# வாழ்வை வடிவமைக்கும் வாசிப்பு

வாழ்வுக்கும் வாசிப்புக்கும் நெருக்கமான தொடர்பு இருக்கின்றது. வாசிப்பவன் வாழ்கின்றான். வாசிக்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான். வாசிப்பவன் வாழ்வை வடிவமைக்கின்றான். வாழ்வை வடிவமைத்தவன் உலகை வடிவமைத்து இன்னும் பல விசித்திரமான கண்டுபிடிப்புகளுக்கு வழியமைக்கின்றான்.

வாழ்வும் ஒரு கட்டடம் போலத்தான். எந்த அளவுக்கு அழகாக திட்டமிட்டு தேவைக்கு ஏற்ப நிர்மாணித்துக் கொள்கின்றோமோ அதுபோலதான் வாசிப்பும் எம்மை வடிவமைத்து விடும்.

வாழ்வுக்கு அர்த்தம் தரும்.

மனிதனுக்கு தேவைப்படுகின்ற அனைத்து விதமான அனுபவங்களையும் அப்படியே கையளித்து விடுகின்ற பணியை வாசிப்பு செய்கின்றது.

நேரடியாக பெற்றுக்கொள்ள முடியாத அனுபவங்களை எல்லாம் ஒன்று திரட்டி அவனுக்கு கொடுக்கக்கூடிய ஆற்றலும் வலிமையும் மிக்கது தான் வாசிப்பு

தன் வாழ்க்கைப் பயணம் வேண்டி நிற்கின்ற அனைத்து விதமான வழிகாட்டல்களையும் வாசிப்பு அவனுக்கு கொடுத்து விடுவதோடு அவனை அப்படியே உருவாக்கி நெறிப்படுத்தி வழிபடுத்தி முன்னோக்கி தள்ளிவிட்டு அவன் நிமிர்ந்து நிற்பதை தள்ளி இருந்து பார்க்கும் ஒன்றாக வாசிப்பு அமைகிறது.

வாழ்க்கைப்பாதை எவ்வளவு தான் நீண்டு கரடு முரடாக இருப்பினும் இடைவிடாத வாசிப்பு வழியாக வாழ்வைப் புரியவும் அதன் சவால்களை எதிர்கொண்டு முன்னோக்கி நகரவும் வாசிப்பு அவனை தூண்டி விடும்.

விரக்தியின் விளிம்பில் நின்று இன்னும் ஒரே ஒரு தடவை வாழ்ந்து பார்க்கலாம் என்று முண்டியடித்துக்கொண்டு வந்தவர்கள் பலரதும் வாழ்க்கை வரலாறு எதிர்கால சந்ததிக்கு வழுக்கலில் ஊன்று கோலாக அமைந்துள்ளன.

இப்படியும் நாவல் என்று வாசகனே துவண்டு விடச் செய்யாது முன்னோக்கி தள்ளி இறுதி பக்கம் வரை நகர்த்தி விடுவது போலத்தான் திட்டமிட்ட வாசிப்பும் தேவையுடைய வாசகனை வழிபடுத்தி வடிவமைத்து விடும்.

இன்னொருவரின் மூளைக்குள் அடைபட்டுக் கிடந்த ஒன்றின் எழுத்தாக்க வடிவம் தான் வாசிப்பு வழியாக வாசகனின் மூளைக்கு நேரடியாக கடத்தப்படுகின்றது. அந்த வகையில் வாசிப்பு என்பது பலரது மூளைகளின் உட்கிடக் கைகளை அரிய கருத்துக்களை சிந்தனைகளை புத்தாக்கங்களை வாசகனின் மூளைக்கு நகர்த்தி விடுகின்ற பணியை தான் செய்கிறது

புத்தகங்களும் வாசகர்களும் வரலாறு நெடுகவும் இருந்து வந்ததில் தான் உலகம் இந்த அளவு உயர்ந்து எழுந்து முன்னேறி இருக்கின்றது. இன்னும் முன்னேற்றப் பாதையில் உலக மக்களை அழைத்து பணியாற்ற தூண்டிக் கொண்டிருக்கிறது


எழுத்தாளர்களும் வாசகர்களும் கருத்துக்களும் இல்லை என்று இருந்தால் உலகம் இந்த அளவு வந்திருக்காது.

ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் அறிய வரலாற்றுப் பணிகளும் முன்னெடுக்கப்படுவதற்கு புத்தகங்களும் கருத்துக்களும் சிந்தனைகளும் வாசிப்பும் வாசகர்களும் தான் காரணம் என்றால் அது பிழையாகாது. வாசிப்பு தான் வாழ்வை வடிவமைத்து வாழ வைத்திருக்கின்றது






நாச்சியாதீவு பர்வீன்



# சீனு ராமசாமி வாசகனுடன் எதிரொலிக்கும் சொற்களின் சிம்பொனி

கிண்ணியா
ஏ.நஸ்புள்ளாஹ்

இலக்கியப் பிரதிகள் மனித ஆன்மாவுடன் வேரூன்றி வாழ்வியல் சம்பவங்களைப் பேசவேண்டும் என்பது ஒருவகை சிக்கலான தன்மையாக இருப்பினும் இந்த எதிர்பார்ப்பை முழுமையாக நிராகரிக்க முடியாது என உரையாடலைத் தொடங்குபவன் நான்,

இது நிழல் இலக்கியப் பிரதிகளுக்கு பொருந்தாவிடினும் ஆழ்ந்து வாசிக்கும் வழக்கமான சிந்தனையின் எல்லைகளைத் தாண்டிய பயணத்தைத் தொடங்கி வைக்கும்.

சீனுராமசாமியின் கவிதைப் பிரதிகளை வாசிக்கும் வாசகன் பல வகையான அவரது மொழி உணர்ச்சிகளை காண்பான்.இன்னும் கவிதைச் சம்பவங்களை காண்பான், இது ஒரு பிரதியின் உள்ளுறுப்பு அல்லது உடல் நுணுக்கங்களைத் தக்கவைத்துக்கொள்கின்றன, மேலும் வாசகனுக்கு புதிய அனுபவத்தை வழங்குகின்றன.

கவிதை அனுபவத்தை தேடும் வாசகன் அவரது ஒவ்வொரு கவிதைப் பிரதிகளிலும் வாழ்வியலின் நுண்ணிய வடிவத்தை அதிகமதிகம் கற்றுக் கொள்ள முடியும்.

சீனு ராமசாமி வாசகனுடன் எதிரொலிக்கும் சொற்களின் சிம்பொனி. வாழ்வியல் புலத்தை அதன் சாராம்சத்தைப் படம்பிடித்துக் காட்டும் கவிதை வெளிப்பாடாக அவரது கவிதைச் சம்பவங்கள் அமைகின்றன அவை மனதின் சிக்கலான நடைமுறைகளை, மனிதனால் தவறவிடப்பட்ட அறத்தை ஆராய வாசகனை அழைக்கின்றன.

“அன்று போர் இருந்தது
அன்று இரவின் துரோக
நிலவின் குளிர்ந்த
வெளிச்சத்தில் ஒரு,
குறுநிலராஜன் கைதானான்.
இன்றும் போர் இருக்கிறது
கத்தியின்றி
ரத்தமின்றி
லேசர் புன்னகையில் முதுகை தொட்டு கிழிக்கிறது
போர் எப்பவும் இருக்கிறது
எதுவும் மாறாமல்
அப்படியே
இருக்கிறது.“

கவிதையின் அகம் புறம் அதன் மையத்தையும் வாழ்வியலில் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாடமாக வாசகனுக்கு தருவதுடன் இது பன்முகத் தன்மையின் கருப்பொருள் ஒரு கவிதையின் ஆய்வு மற்றுமல்ல கவிதையின் பழமை உடலை மீறுவதான அழகியலையும் .உளவியல் நிலையின் வழக்கமான புரிதலை மீறிய ஒரு கதையையும் காண முடியும்.

இறுதி வரிகள் மனித மனதின் அடுக்குகளைத் தோலுரித்து விவாதித்துப் பேசுவதுடன் போர் அல்லது மனித மனதின் முரண்களை இன்னும் அதிகார சிந்தனையையும் திரை ஓவியமாய் காட்சிப்படுத்துகிறது.

சீனு ராமசாமியின் ஒவ்வொரு கவிதைப் பிரதிகளும் வெவ்வேறு வகையான அடையாளப்படுத்தல்களுடன் வாசகனை தொடர்புபடுத்தக்கூடியதாக அமைகிறன. இருத்தலியல் நிச்சயமற்ற தன்மைகளைப் பற்றி அணுகுதல் அல்லது தனிப்பட்ட உறவுகளின் துரோக நிலப்பரப்புக்களை காட்சிப்படுத்துதல் என மனித அனுபவத்திற்கு முகம் பார்க்கும் ஒரு கண்ணாடியைப்போல வாசகனுக்கும் பிரதிகளுக்குமான இணைப்பை கடத்திச் செல்கின்றன.

“இட்லி துணிகள் காய்வதற்கு
ஒரு மூலையில் சாய்த்து வைக்கப் பட்டிருக்கிறது.
இவ்வேணிப்படிகள் என்றே நினைத்த பாலப் பருவ வயதில் அலைகள் ஓய்வதில்லை விச்சு கக்கத்தில் வெங்காயத்தை வைக்க மொட்டை மாடிக்கு ஏறிப் போவதை பார்த்தப் பிறகு ஏணிப்படிகள் சிநேகமானது எனக்கு,
ஏணிப்படிகள் ஒரு நாளும் தன்னை ஏணியாக
நினைத்தது இல்லை,
ஏணிக்கு ஏறத் தெரியாது
எவரையும் ஏற்றாது
இறக்காது
ஏறலாம்
இறங்கலாம் ஏறியதும்
தள்ளி விடலாம்
ஒரு எதிர்பார்ப்பும் அதற்கு
இல்லை,
இறங்குவோருக்கு ஆறுதலும்
சொல்வதில்லை,
எப்பவும் ஏணிப்படிகள்
ஏணிப் படிகளாகத்தான் இருக்கின்றன
அதுவே அதன் விசேஷ விதி“.

சீனு ராம சாமியின் மற்றுமொரு கவிதை இது.

கவிதைப் பிரதி மனித அனுபவத்தைப் பிரதிபலிக்கிறதா எனக் கேட்டால் ஆம் என சட்டென்று சொல்லி விடலாம் எனினும் சிக்கலான உணர்ச்சிகளை கவிதை நுணுக்கத்துடன் வெளிப்படுத்தும் சீனு ராமசாமியின் வழிகாட்டல் அவரது இலக்கிய நுண்மைக்கு ஒரு சான்றாகும்.

பிரதியின் ஆழம் மனித நிலையின் ஆழத்திற்கு நம்மைக் கடத்துவதுடன் கவிதை உள்நோக்கத்தைத் வாசகனுக்கு தூண்டுகின்றது.

வார்த்தைகள் மனதில் நீடிக்கும் செயலைச் செய்கிறது. பிரதியை வாசித்து கண்களை மூடியபின் நீண்ட கால சிந்தனைக்கு அது நம்மை அழைக்கிறது.

சீனு ராமசாமி மற்றைய கவிதை சொல்லிகளிடமிருந்து தனித்து அல்லது விலகி கவிதை தயாரிக்கும் ஒரு பன்மையான சுயம் வாசகனை கவிதையின் அகவெளியில் பயணப்பட வைக்கிறது.இது இலக்கியப் பிரதிக்கான ஒரு நுட்பமான கலை, இந்த பணியை நேர்த்தியாக வழிநடத்துகிறார் சீனு.

“ஓடும் நதி
வளைந்து நெளிந்து ஓடுகிறது
ஓடுவதால்
அவ்வூருக்கும் சொந்தமில்லை
அவ்வழியே
உதிரும் காட்டு மலர்களையும்
தவறி விழும் விலங்குகளையும்
உதித்தச் சூரியன் மிதந்து
மறையும் நீரோடு ஓடுகிறது
எல்லா வரலாறுகளையும்
கரையோரம் கவனித்தபடி,
ஊர் பாசம்
உறவுப் பாசம்
ஜாதிப் பாசம்
காதலின் தொடக்கமும்
முடிவையும் நினைவில்
தேங்கிய மனிதர்களின்
வழிகளில்
எல்லாவற்றையும்
சலவை செய்ய
முடியாது
நினைவின்
இசையென
தாயின்
பெயர்க்
குளிர்மை
யோடு
வழியூர்
களின்
பாசனத்திற்கும்
பாய்ந்து
தாயாகவே
ஓடுகிறது.
ஆற்றுப்பாசமென நாள்தோறும் எழுதப்படும் ஏதோ ஒரு பாசத்தின் இலக்கிய வரிகளிடமிருந்து தப்பிக்கப் பிள்ளை போல் ஒவ்வொரு ஊரிலும் ஒரு நதி இப்பவும் இவர்களை விட்டு ஓடுகிறது“

சீனு ராமசாமியின் இன்னுமொரு கவிதைப் பிரதி கலாச்சார நுணுக்கங்கள் மற்றும் வினோதங்களைப் படம்பிடித்து, சிற்றறிக்கையாக அதன் சாரத்தை நீர்த்துப்போகாமல் பரந்த பார்வையாளர்களுக்கு அணுகும்படி செய்கிறது. கவிதை தன்னை சுயமாக அடையாளப்படுத்தி உள்ளார்ந்த எழுதுகோலை தக்கவைத்து, உணர்ச்சித் தாக்கம் மாறாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

இங்கு, கவிஞர் ஒரு நதியை மட்டும் சம்பவங்களால் காட்சிப்படுத்தவில்லை. மாறாக உலக வரைபடத்தின் யதார்த்தத்தை கவிதைச் சம்பவங்களால் சிந்தித்துள்ளார், இந்த சமூகம் தங்கள் மனசாட்சியை அனுமதிக்க மறுத்து வருகிற அறத்தை, மேலும் நுட்பமாக புனைவு உத்திகளுடன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

சீனு ராமசாமியின் கவிதைகள் திடீர் கவிதை பிரசவமும், உரைநடைகளும் அல்ல ஒரு சில சொற்களைக் கொண்டு கவனிக்கும் வாசகன், இது உளவியலை விளைவிக்கும் நுணுக்கங்களை விவரிப்பதை உணர்வான்.

மனித ஆன்மாவின் உறவு நிலையை இந்த பிரபஞ்சத்தின் இயற்கையுடன் அழகான ஒரு கவிதைப் பிரதியாக உருவாக்கிருப்பது கவிதைச் சம்பவத்தின் அழுத்தத்தை இங்கு வாசகனுக்கு பரிந்துரைக்கிறது.

அவரது கவிதைகளை மொத்தமாக இணைத்துப் பார்க்கும்போது,வாசகன் புரிந்து கொள்ளும் வாசிப்புக்களும் உரையாடல்களைத் தொடங்கி வைக்கும் கருத்து நிலைகளும் நிறையவே உள்ளன. இதனை சிலர் பொதுப்புத்தியில் வாசகனை இயங்க வைக்கும் நடைமுறை என்பர்.

“பெருமைக்குக் கட்டிய
சொந்தவூர் பெரிய வீட்டின்
அலமாரிக்கு பொலிவு சேர்க்கும்
ஓட்கா போத்தலுக்கும்
ஒயின் போத்தலுக்கும் இடையில்
இணைப்பு பாலப் பணியில்
சிலந்தியொன்று மும்முரமாக
இருக்கிறது.
வெளி நாட்டிலிருந்து பூட்டிய வீட்டின் சொந்தங்கள் அப்பாலத்தின் வழி வரக்கூடும் என்பதறிந்து பாலத்திலே விழித்திருக்கிறது.”

இது சீனு ராமசாமியின் மற்றொரு கவிதைப் பிரதி இவ்வாறானதொரு அனுபவத்தை அல்லது நடைமுறை இயங்குதலை நமது சூழலில் உருளாத கணங்கலில்லை எனச் சொல்ல முடியும்.

கவிதை தயாரிப்பு முறைமை சூழலில் இன்னும் தேநீர்க் கடைகளில் முன்வைத்துப் பேசும் களமாக இருப்பினும் அதன் உட்தளம் முன்னிறுத்தும் அர்த்தங்கள் வாசகனின் புலன்களில் ஊடுருவி மனத் தளத்தில் விமர்சன அபிப்பிராயங்களை ஸ்தாபிக்கிறது.

இறுக்கமான உடல் அமைப்புகள் அற்ற இன்னும் அகராதியை புரட்ட வேண்டிய எல்லைகளுக்கு செல்லாமல் நேரடியான அர்த்தகனம் நிரம்பியிருகும் பிரதிகளுக்கு சொந்தக்காரராக சீனு ராமசாமியைக் காண முடியும். இன்னும் மிகையுணர்ச்சிகளைப் பேசும் பிரதிகளுக்கு பரவலாக வரவேற்பு இருப்பினும் இவ்வாறான பிரதிகள் வாசகனின் அங்கீகாரத்தைப் பெறத் தவறுவதில்லை.

தமிழ்ச் சூழலில் இயக்குநராக,நல்ல வாசகனாக அவர் இருப்பதுடன் இவைகளுக்கு அப்பாற்பட்டு மொழிக்கு புதிய சம்பவங்களை நிகழ்திக்காட்டும் சூட்சுமத்தை சீனு ராமசாமி நிறையவே கையிலெடுக்கிறார்.

## அறிவுத்தீபம்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சார்ந்தோர்களே ஜம்இய்யத்துல் உலமாவை ஷாபி மத்ஹபின் அடிப்படையில் அமைத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் ஷாபிஈ ரலியல்லாஹ்ு அவர்கள் தமது வாழ்வில் இரவை மூன்றாகப் பிரித்து ஒரு பகுதியில் அல்குர்ஆன் பாராயணம், ஒரு பகுதியில் உறக்கம், ஒரு பகுதியில் ஆய்வுகளை பதிவு செய்தல் என கழித்த வரலாறு உண்டு. தினமும் ஒருமுறை அல்குர்ஆனை கத்மு செய்வார்கள். நோன்பு காலங்களில் ஒருநாளைக்கு இரண்டு முறைகள் ஓதி முடிப்பார்கள்.

அறிவுக்கடல் ஆய்வுச் சமுத்திரம் வையகம் வியந்த இமாம் ஷாபிஈ அவர்களின் தீவானுல் இமாம் அல் ஷாபிஈ என்ற கவிதைத் தொகுப்பை பார்க்குமிடத்து அவர்கள் ஹதீஸ / கலைஞர், சட்ட வல்லுநர், அரபு இலக்கண இலக்கிய வல்லுனர் மாத்திரமல்ல பல்துறை அறிஞராகவும் மகாகவியுமாக திகழ்ந்திருப்பது புலனாகிறது.

அவர்களின் கவிதைகளில் சில இதோ

01. நட்பு பற்றி.

மனிதன் உன்னை வெளிப்பகட்டாகப் பேணுகிறான் என்றால் அவனை விட்டுவிடு. அவனைப் பற்றி அலட்டிக் கொள்ளாதே.மனிதர்களில் மாற்றீடுகள் உள்ளனர். விடுவதில் நிம்மதி உண்டு. தோழன் புறக்கணித்தாலும் இதயம் அவனைப் பொறுத்துக் கொள்ளும். நீ விரும்புகிற எல்லோரின் இதயமும் உன்னை விரும்புவதாக இல்லை. நீ தூய்மையாய் நேசித்த எல்லோரும் உனக்குத் தூய்மையாய் இல்லை. அன்புத்தூய்மை இயல்பாக இல்லை எனில் வெளிப்பகட்டாக வரும் நண்பனில் நன்மை இல்லை.ய உண்மையான வாக்குறுதி தவறாத நடுநிலையான நண்பன் பாரில் இல்லையெனில் அவணிக்கு சலாம்.

02. குறை பற்றி.

குறை நம்மில் இருக்க நாம் நமது காலத்தை குறை கூறுகின்றோம். நாம்தான் நமது காலத்துக்கு குறை. குற்றமின்றி காலத்தை வசை பாடுகின்றோம். காலம் பேசினால் அது நம்மை வசை பாடும். ஓநாய் ஓநாயின் மாமிசத்தை தின்பதில்லை. நம்மில் சிலர் சிலரை பகிரங்கமாக தின்கின்றனர்.

03. இலங்கை பற்றி.

சரண்தீப் மலைகளே முத்தைக் கொட்டு .தக்ரூர் கிணறுகளே தங்கப் பெருக்கெடு. நான் வாழ்ந்தால் எனக்கு உணவு இல்லாமல் இல்லை. நான் மரணித்தால் எனக்கு மண்ணறை இல்லாமலும் இல்லை என்று தொடர்ந்து பாடினார்கள்.

ஹிஜ்ரி 150 இல் பிறந்து 204 இல் வபாத்தாகிய இமாம் அவர்கள் அன்று இலங்கையின் சரண்தீபின் மலைகளை விழித்துப் பாடி இருக்கின்றார்கள்.

04. மரணப் படுக்கையில்.

என் இதயம் கடினமாகி என் வழிகள் இறுகியபோதும் என் ஆசையை உன் மன்னிப்பின் கீழ் ஏணியாக ஆக்கினேன். என் பாவம் என் மீது பெரிதாக உள்ளது உன் மன்னிப்போடு சேர்த்துப் பார்க்கும்போது உன் மன்னிப்பே பெரிது.

தொடர்ந்து சுமார் ஐந்து ஆண்டுகள் எகிப்தில் வாழ்ந்த இமாம் அவர்கள் அக்கால எல்லைக்குள் பல அறிஞர்களை உருவாக்கி தனது மத்ஹபை அரேபிய தீபகற்பத்தின் எண் திசைகளிலும் ஸ்திரப்படுத்தி தனது 54 ஆண்டுகால வாழ்வில் 540 ஆண்டு வாழ்ந்து செய்ய வேண்டிய அறப்பணிகளை எல்லாம் நிறைவு செய்து ஹிஜ்ரி 204 ரஜப் பிறை 29 வெள்ளிக்கிழமை இரவு இறையடி எய்தினார்கள்.

அன்னாரின் ரவ்லா எகிப்தில் அமைந்திருக்கிறது.அதனை ஒட்டி கி.பி. 1211 ஆம் ஆண்டு சுல்தான் ஐயூபி அல்காமில் அவர்கள் பெரும் பள்ளிவாசலையும் கட்டினார்கள். இமான் ஷாபி மஸ்ஜித் என்ற பெயரில் அது அன்று தொட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றது.

நாம் எமது செயல்கள் சம்பந்தப்பட்ட மார்க்க அனுஷ்டானங்கள் அனைத்திலுமே தழுவி நடக்கும் ஷாபி மத்ஹபின் ஸ்தாபகர் பற்றி அவர்கள் வபாத்தான ரஜப் மாதத்தில் அவர்கள் நினைவாக இச்சிறு கட்டுரையை பிரசுரிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

வல்ல அல்லாஹ் அன்னவர்களை பிர்தவ்ஸ் சுவனபதியில் அமர்த்துவானாக. ஷாபி மத்ஹப் உலகம் உள்ள அளவு நிலைத்திருக்க அருள் பாலிப்பானாக.

”குறைசிகளைச் சேர்ந்த ஒரு சன்மார்க்க அறிஞர் உலகின் எண் திசைகளையும் அறிவால் நிரப்புவார்” என்று இமாம் அவர்கள் பிறக்க பல்லாண்டுகளுக்கு முன்பே முன்னறிவிப்புச் செய்த முத்து நபிகளார் மீது

ஸல்லல்லாஹ்ு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹ்ுஅலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹ்ு அலா முஹம்மத்
யா ரப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்!

## மனநலமும் ஆலோசனையும் 67

# தற்கொலைக்கான காரணங்கள்

தற்கொலை தொடர்பான சில விடயங்களை கடந்த பதில் பார்த்தோம். இன்றைய பதிவில் குழந்தைகள் மற்றும் பதின்ம வயதினரில் தற்கொலை எண்ணம் அல்லது தற்கொலை முயற்சிகள் நிகழ்வதற்கான காரணங்கள் பற்றி மேலோட்டமாக தெரிந்து கொள்வோம்.

உலகலாவில் இளைஞர்களிடையே தற்கொலைகள் ஒரு தீவிர பிரச்சனையாக இருந்தது வருவதையும் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களின் இறப்புக்கு தற்கொலை இரண்டாவது முக்கிய காரணமாக இருப்பதையும் நாம் தெரிந்து கொண்டோம்.

தற்கொலை முயற்சியில் ஈடுபடும் பிள்ளைகள் மற்றும் இளம் பருவத்தினர் குறிப்பிடத்தக்க மனநலக் கோளாறு, மனச்சோர்வு போன்ற மனநலத்துடன் தொடர்பான காரணங்களை கொண்டுள்ளனர் என பொதுவாக குறிப்பிட்டப்படுகிறது.

இளம் குழந்தைகளிடையே, தற்கொலை முயற்சிகள் பெரும்பாலும் மனக்கிளர்ச்சியுடன் தொடர்பு பட்டதாக இருக்கும். அவை சோகம், குழப்பம், கோபம் அல்லது கவனம் மற்றும் வேகத்தன்மையுடனான நடத்தை போன்றவற்றுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பதின்வயதினர் மத்தியில் தற்கொலை முயற்சிக்கான காரணங்கள் மன அழுத்தம், சுய சந்தேகம், வெற்றிக்கான அழுத்தம், நிச்சயமற்ற தன்மை, ஏமாற்றம் மற்றும் இழப்பு, அதீத கட்டுப்பாடு போன்ற விடயங்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம். இந்த காரணங்கள் காலப்போக்கில் கடுமையான மனத்தாக்கமாக மாறி அவர்களின் உள்ளுணர்வில் பாரிய குமுறல்களை ஏற்படுத்தலாம்.

அதேவேளை சில பதின்ம வயதினருக்கு, தற்கொலையே அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாகத் தோன்றலாம்.

தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சிகள் பற்றிய எண்ணங்கள் பெரும்பாலும் மனச்சோர்வுடன் தொடர்புடையவை. மனச்சோர்வைத் தவிர, பிற ஆபத்து காரணிகளும் உள்ளன.

தற்கொலை முயற்சிகளின் குடும்ப வரலாறு, வன்முறை வெளிப்பாடு, தூண்டுதல், ஆக்கிரமிப்பு அல்லது சீர்குலைக்கும் நடத்தை, கொடுமைப்படுத்துதல், நம்பிக்கை அல்லது பாதுகாப்பு இல்லாமை, உதவியற்ற உணர்வுகள், கடுமையான இழப்பு, நிராகரிப்பு போன்றனவும் அடங்கும்.

மனச்சோர்வு, தற்கொலை உணர்வுகள், நடத்தை கோளாறுகள் சிறு பிள்ளைகள் அல்லது இளம் பருவத்தினருக்கு இருந்தால் அதற்கான காரணத்தை அடையாளம் கண்டு தகுந்த சிகிச்சை அளிக்க முடியும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் எப்போதும் இவ்வாறான பிள்ளைகள் விடயத்தில் மிகவும் அவதானமாக செயற்படுவதுடன், பயிற்சி பெற்ற மற்றும் தகுதி வாய்ந்த மனநல நிபுணரால் உடனடியாக மதிப்பீடு செய்து சிகிச்சைக்கு உட்படுத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

## மங்கையொளி

பயாஸா பாஸில்



# ராணி

Single parent ஆள் வளர்க்கப்பட்டாள். தந்தை தாயை விட்டு பிரிந்து இன்றோடு இருபத்தி மூன்று வருடங்கள். தந்தை அவள் கிடைத்தவுடனே கைவிட்டு விட்டான். தாய் தனக்கு சொந்தமான நிலத்தில் ஒரு குடிசையைக் கட்டிக் கொண்டாள். எல்லாம் கைவிடப்பட்ட போது இறைவனை மட்டும் நம்பிக் கொண்டு வாழத் தொடங்கினாள்.

தாய் தன் பிள்ளையை வளர்க்க வேண்டும். அவளை நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்பதற்காக இடியப்பம் விற்கும் தொழிலை எடுத்துக் கொண்டாள். யாரிடமும் கையேந்தும் நிலைக்கு வந்து விடக் கூடாது என்பதில் உறுதியாய் இருந்தாள். தாய்வீட்டில் கொடுக்கப்பட்ட அத்தனை நகையையும் பத்திரப்படுத்திக் கொண்டாள். அதை விற்க வேண்டும் என்ற யோசனை அவளுக்கு வரவில்லை.

தனதும் பிள்ளையின் செலவை இடியப்பம் விற்று பார்த்துக் கொண்டாள். சிலர் அவ்வப்போது குடும்ப நிலை கண்டு ஸதகா செய்தார்கள். குடும்ப நிலை உணர்ந்ததால் சிறுவயதில் இருந்தே எதையும் வேண்டும் என்று அடம் பிடித்துப் பெற்றுக் கொள்ள மாட்டாள்.தாயிடம் விரும்பும் பொருட்களை கேட்பாள். முடிந்தால் தாய் வாங்கிக் கொடுப்பாள். ஏற்றுக் கொள்வாள். முடியாத போது பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தாய் சொல்லும் போது உடன்படுவாள்.

நன்றாக படித்தாள். மேலதிக பாடங்களுக்கு ஒரு நாளும் அவள் சென்றது கிடையாது. வீட்டில் பாடங்களை மீட்டுவாள். படிப்பாள் பயிற்சிகளை செய்து கொள்வாள். பொது நூலகத்தில் தனக்கு தேவையான புத்தகங்களை பெற்றுக் கொண்டு படித்து வந்தாள்.

சாதாரண தரம் உயர் தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்றாள். கலைத்துறை பட்டதாரியாய் வெளியேறினாள். இப்போது ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறாள். முதலாவது சம்பளத்தை தன் தாயிடம் ஒப்படைத்தாள்.

உம்மா இந்த ஒட்டு மொத்த சம்பளமும் உங்களிடம் ஒப்படைக்கிறேன். ஆனால் நான் என் சம்பளத்தில் இருந்து எப்போதுமே இரண்டாயிரம் ஸதகா செய்ய ஆசைப்படுகிறேன். தேவையுடையவர்களாக கேட்டு வருபவர்களையும் தாண்டி சமூகத்தில் தேவை உடையவர் என நாங்கள் அடையாளம் காண வேண்டிய மக்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு அந்த பணத்தைக் கொடுக்க வேண்டும்.

என்னைப் போல ளைபெடந ியசநவெ ஆள் கஷ்ட நிலையில் வாழ்ந்தோர், விதவை, மருத்துவ செலவுக்கு கஷ்டப்படுவோர், அனாதையாக இருப்போர், முதியோர் இல்லம். முக்கியமான நலன் புரி அமைப்பு.... இப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்க வேண்டும். நான் கொடுக்கும் அந்த சிறு தொகை அவர்களுக்கு எதற்கு வேண்டுமானலும் பயன் மிக்கதாக இருந்தாலே போதும். தேவையின் போது அந்த பணத்தின் அளவை கூட்டிக் கொடுக்கலாம் உம்மா.

"அல்ஹம்துலில்லாஹ். நல்ல யோசனை உன் உழைப்பு மகளே நீயே முடிவெடு. நாங்கள் கடந்து வந்த இறந்த காலம் யாரோ ஒருவருக்கு நிகழ்காலமாக இருக்கும். நாம் செய்கின்ற உதவிக்கு இறைவன் நிரப்பமான கூலியை வழங்கட்டும் எம்மை பாதுகாப்பானாக!"

**அஸ்பா கமால்டீன்**

# ஆழமான பெண்களின் உறவுகளில் கடினம் ஏன்?

ஆழமான பெண்ணாக இருப்பது என்பது எல்லோராலும் எளிதில் கையாள முடியாத ஒரு தீவிரத்துடன் வாழ்வதாகும். ஆழமான பெண்ணுடன் உறவுகள் ஏன் பெரும்பாலும் பிராகாசிப்பதில்லை?

**- அவள் ஆழமான கேள்விகளைக் கேட்கிறாள்:**

ஒரு ஆழமான பெண் சிறிய உரையாடல்களை விரும்ப மாட்டாள். சந்தித்த முதல் நாளில் கூட உங்கள் கனவுகள், அச்சங்கள் மற்றும் நம்பிக்கைகள் பற்றிய கேள்விகளைக் கேட்பாள். ஆழமற்ற உரையாடல்களில் அவளுக்கு ஆர்வம் இருப்பதில்லை.

**மிருகத்தனமான நேர்மை:**

அவள் எல்லாவற்றிற்கும் மேலாக நேர்மையை மதிக்கிறாள். அவள் உண்மையை அப்படியே சொல்கிறாள், உன்னிடமிருந்தும் அதையே எதிர்பார்க்கிறாள். பூசி மெழுகுவது அவளுடைய பாணி அல்ல.

**அவள் விரும்புவதை அவள் அறிவாள்:**

அவள் உறவுகளுடன் விளையாடுவதில்லை. அவள் உன்னை விரும்புகிறாள் என்றால், அவள் அதை உடனடியாக அறிந்துகொள்வாள். அவளுடைய ஆற்றலைச் சரியாக உணருகிறாள். பெண்களுக்கு ஆண்களை விட உள்ளுணர்வு அதிகம்.

**உறவுகளில் ஆழத்தை விரும்புவாள்:**

வேடிக்கையான நாட்கள் நன்றாக உள்ளன. ஆனால், அவள் அதைவிட அதிகமாக தேடுகிறாள். அவள் ஆழமான, நட்பான உரையாடல்களை விரும்புகிறாள், உங்கள் கதையை, உங்கள் வலியைப் புரிந்து கொள்ளவும், அர்த்தமுள்ள ஒன்றை உருவாக்கவும் அவள் விரும்புகிறாள்.

**நெருக்கத்திற்கு அஞ்சாதவள் :**

நெருங்கிப் பழகுவதற்கு அவள் பயப்படுவதில்லை. அவள் நெருக்கத்தை ஒரு பலமாகப் பார்க்கிறாள் பலவீனமாக அல்ல. ஆழமான தொடர்புகளைப் பொக்கிஷமாகப் பார்க்கிறாள். ஏனென்றால், யாரை நெருக்கத்தில் வைக்க வேண்டும் என்பதை அவள் நன்றாக அறிந்திருக்கிறாள். அவ்வளவு இலகுவில் அவளை யாரும் நெருங்கிட முடியாது.

**அவள் உங்கள் மூலம் சரியாகப் பார்க்கிறாள்:**

ஓர் ஆழமான பெண்ணுக்கு மனிதர்களைப் படிக்கும் அசாத்தியமான திறன் உள்ளது. உங்கள் பயம், உங்கள் பலம் மற்றும் உங்கள் உண்மையை அவள் கவனிக்கிறாள். இந்த குணம் உங்கள் அமைதியை குலைக்கலாம். ஆனால், இதுதான் இருவருக்குள் நம்பகத்தன்மையை உருவாக்கும் வழி.

**நிலைத்தன்மை:**

மென்மையான அல்லது காதலுடன் கூடிய சமிக்ஞைகள் அவளை அணைக்கின்றன. அவள் நம்பகத்தன்மையை மதிக்கிறாள். இந்த நெருக்கமே நம்பிக்கையின் அடித்தளம் மற்றும் நீடித்த பந்தம் என்பதை அறிவாள்.

**தீவிர உணர்ச்சி:**

அவளுடைய உணர்ச்சிகளும், எண்ணங்களும் சக்திவாய்ந்தவை. அவள் செய்யும் எல்லாவற்றிலும் அவள் தன்னை முழுமையாக ஈடுபடுத்துகிறாள். அத்தகைய தீவிர ஈடுபாட்டிற்கு நீங்கள் தயாராக இல்லையெனில் உங்கள் பயணம் கடினமே.

**ஆழமாக நேசிப்பாள் அல்லது விலகிடுவாள்:**

மேலோட்டமான உறவுகளில் அவளுக்கு விருப்பமில்லை. நீங்கள் அவளுடைய ஆழத்தை உணர முடியாவிட்டால், அவள் உங்களுக்குள் குடியேற மாட்டாள். காதல் என்பது பரஸ்பரம் அல்லது அர்த்தமுள்ளதாக இல்லாத போது அவள் எளிதில் விலகிச் செல்கிறாள்.

**அவள் காத்திருக்க மாட்டாள்:**

ஓர் ஆழமான பெண் தன்னைப் பற்றி நிச்சயமற்ற ஒருவருக்காகக் காத்திருக்கத் தயாராக இருப்பதில்லை. அந்த அளவுக்கு தன்னை மதிக்கிறாள். அவள் வலிமையானவள் சுதந்திரமானவள் தன் மதிப்பை சமரசம் செய்வதை விட தனியாக இருக்கத் தயாராக இருக்கிறாள்.

ஓர் ஆழமான பெண் அனைவருக்கும் அமைவதில்லை. நினைத்ததற்கு அப்பாற்பட்ட நம்பகத்தன்மை, ஆழமான இணைப்பு மற்றும் அன்பான இதயத்தை மதிக்கும் ஒருவருக்காக அவள் அனைத்தையும் செய்ய தயாராக இருக்கிறாள். அவளுடைய ஆழத்திற்கு நீங்கள் தயாராக இருந்தால், மற்றவர்களைப் போலல்லாமல் நீங்கள் ஒரு தனித்துவமான அன்பை அனுபவிப்பீர்கள். வெற்றிகரமான வாழ்க்கையை வாழ்வீர்கள்.

## ஐசிசி இன் சிறந்த வீர, வீராங்கனைகள் பட்டியல் வெளியீடு:

## வளர்ந்து வரும் சிறந்த வீரர் விருதை தட்டித் தூக்கினார் கமிந்து

# ஒருநாள் அணியின் தலைவரான அசலங்க

## ஒருநாள் மற்றும் ரி20 இல் ஹசரங்க மற்றும் சமரி



அரபாத் பஹர்தீன்

சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ள கடந்த 2024ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் அணியின் தலைவரான இலங்கை அணியின் தலைவர் சரித் அசலங்க பெயரிடப்பட்டுள்ளார். மேலும் சிறந்த ரி20 அணியில் இலங்கையின் சுழல்பந்து நட்சத்திரமான வனிந்து ஹசரங்க இடம்பெற்றிருக்க கடந்த ஆண்டின் சிறந்த வளர்ந்துவரும் வீரராக இலங்கையின் சகலதுறை வீரர் கமிந்து மெண்டிஸ் தன் வசப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஐசிசி எனப்படும் சர்வதேச கிரிக்கெட் பேரவையானது ஒவ்வொரு வருடமும் அந்த அந்த வருடங்களில் திறமையை வெளிப்படுத்திய வீரர்களை தெரிவு செய்து கௌரவித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. அதற்கமைய கடந்த 2024ஆம் ஆண்டுக்கான ஒருநாள் , ரி20 மற்றும் டெஸ்ட் போட்டிகளின் சிறந்த வீர, வீராங்கனைகள். சிறந்த ஒருநாள், ரி20 மற்றும் டெஸ்ட் அணிகள் மற்றும் சிறந்த நடுவர் என்ற அடிப்படையில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

### சிறந்த ரி20 வீரராய் தேர்வானார் அர்ஷ்தீப் சிங்

கடந்த 2024ஆம் ஆண்டில் ரி20 கிரிக்கெட்டில் வீரர்களின் செயற்பாடுகளை கணக்கில் கொண்டு அவர்களுக்கு அவர்களில் சிறந்த திறமையினை வெளிப்படுத்திய வீரருக்கு 'சிறந்த ரி20 கிரிக்கெட் வீரர் விருது' வழங்கி கௌரவித்து வருகிறது.

அதற்கமைய ஐ.சி.சி இன் 2024ஆம் ஆண்டுக்கான சிறந்த ரி20 வீரர் விருதை இந்திய அணியின் இடதுகை வேகப்பந்து வீச்சாளரான அர்ஷ்தீப் சிங் தனதாக்கிக் கொண்டார். 2024ஆம் ஆண்டில் மட்டும் அர்ஷ்தீப் சிங் 18 போட்டிகளில் 36 விக்கெட்களை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

வளர்ந்து வரும் வீரருக்கான விருதை வென்று வரலாறு படைத்த கமிந்து மெண்டிஸ்

கடந்த 2024ஆம் ஆண்டிற்கான வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரருக்கான விருதை இலங்கை அணியின் இளம் சகல துறை வீரரான கமிந்து மெண்டிஸ் தனதாக்கி வரலாறு படைத்தார். கடந்தாண்டு மட்டும் கமிந்து மெண்டிஸ் சர்வதேச கிரிக்கெட்டில் 1451 ஓட்டங்களை குவித்துள்ளார். குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட்டில் மட்டும் 1049 ஓட்டங்களை விளாசினார்.

கடந்த 75 ஆண்டுகளில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிவேகமாக 1000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை கமிந்து மெண்டிஸ் படைத்துள்ளார். மேலும்இ தொடர்ச்சியாக 8 டெஸ்ட் போட்டிகளில் அரை சதம் அடித்த முதல் வீரர் என்ற சாதனையையும் அவர் பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

### வேகத்தில் மிரட்டும் பும்ராவுக்கு சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருது



கடந்த 2024ஆம் ஆண்டின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் விருதை இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா தட்டிச் சென்றார். இந்திய அணியின் வெற்றிக்கு மிக மிக முக்கிய காரணியாக இருக்கும் வலதுகை வேகப்பந்து வீச்சாளரான பும்ரா 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 71 விக்கெட்டுகளுடன் 2024 ஆம் ஆண்டில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய பத்து வீச்சாளராக முதலிடமும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### ரோஹித் தலைமையிலான ரி20 அணியில் ஹசரங்க



கடந்த ஆண்டு ரி20 கிரிக்கெட்டில் சிறப்பாக பங்களிப்பு செய்ததன் அடிப்படையில் கடந்த ஆண்டுக்கான சிறந்த ரி20 அணியினை சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ளது. இவ்வணியின் தலைவரான இந்தியாவின் ரோஹித் சர்மா பெயரிடப்பட்டுள்ளார்.அத்துடன் அவ்வணியில் இந்திய வீரர்களான வேகப்பந்துவீச்சாளரான ஜஸ்பிரீத் பும்ரா மற்றும் சகலதுறை வீரரான ஹர்திக் பாண்டியா மற்றும் அர்ஷ்தீப் சிங் ஆகியோரும் இடம் பிடித்துள்ளனர். அத்துடன் இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்கவுக்கும் இவ்வணியில் இடம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பாகிஸ்தான் அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான பாபர் அஸாம் இவ்வணியில் 3ஆம் இலக்க வீரரான இடம்பெற்றுள்ளார். இவர்களுடன் அவுஸ்திரேலியாவின் ஆரம்ப வீரரான ஹெட், இங்கிலாந்தின் பில் சால்ட், ஆகியோருடன் ஆப்கானிஸ்தான் அணியின் சுழல்பந்து வீச்சாளரான ரஷீட்கான் மற்றும் சிம்பாப்பே அணியின் தலைவரும் சகலதுறை வீரருமான சிக்கந்தர் ராசா ஆகியோர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஐ.சி.சி ரி20 அணி

ரோஹித் சர்மா (இந்தியா), டிராவிஸ் ஹெட் (அவுஸ்திரேலியா), ஃபில் சால்ட் (இங்கிலாந்து), பாபர் ஆஸம் (பாகிஸ்தான்), நிகோலஸ் பூரன் (மே.தீவுகள்), சிகந்தர் ராஸா (ஜிம்பாப்வே), ஹர்திக் பாண்டியா (இந்தியா), ரஷீத் கான் (ஆப்கானிஸ்தான்), வனிந்து ஹசரங்கா (இலங்கை), ஜஸ்பிரீத் பும்ரா (இந்தியா), அர்ஷ்தீப் சிங் (இந்தியா).

### மிகச் சிறந்த ஒருநாள் அணியின் தலைவரான இலங்கையின் சரித் அசலங்க



சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் அறிவிக்கப்பட்ட 2024 ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவராக இலங்கை ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவர் சரித் அசலங்க நியமிக்கப்பட்டுள்ளார். அதுமாத்திரமின்றி, ஐசிசி இனால் அறிவிக்கப்பட்ட மிகச் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் அணியில் சரித் அசலங்க உடன் சுழற்பந்து சகலதுறை வீரரான வனிந்து ஹஸரங்க, நட்சத்திர ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பெதும் நிஸ்ஸங்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோரும் இவ்வணியில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அறிவிக்கப்பட்டுள்ள அணியில் இந்திய, அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க மற்றும் நியூஸிலாந்து வீரர்கள் ஒருவர் கூட இடம்பெறவில்லை. மாறாக பாகிஸ்தான் அணியின் வீரர்களான ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சைம் ஐயூப், மற்றும் வேகப்பந்து வீச்சாளர்களான சஹீன் அப்ரீடி மற்றும் ஹாரிஸ் ரௌப் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அத்துடன் ஆப்கானிஸ்தான் அணியை பிரதிநிதித்துவம் செய்து ரஹ்ம துல்லாஹ் குர்பாஸ், அஸ்மதுல்லாஹ் ஒமர்ஷாய் மற்றும் சுழல்பந்து வீச்சாளரான கசான்ஃபார் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

### ஒருநாள் அணி விபரம்

சயீம் அய்யூப் (பாகிஸ்தான்), ரஹ்மானுல்லா குர்பாஸ் (ஆப்கானிஸ்தான்), பெதும் நிஸ்ஸங்க (இலங்கை), குசல் மெண்டிஸ் (இலங்கை), சரித் அசலங்க (இலங்கை), ஷெர்பான் ஷரூதர்ஃபோர்ட் (மேற்கிந்தியத் தீவுகள்), அஸ்மதுல்லா உமர்சாய் (ஆப்கானிஸ்தான்), வனிந்து ஹஸரங்க (இலங்கை), ஷஹீன் ஷா அப்ரிடி (பாகிஸ்தான்), ஹாரிஸ் ரவூப் (பாகிஸ்தான்), ஏ.எம் கசான்ஃபார் (ஆப்கானிஸ்தான்)

### பெட் கமின்ஸின் தலைமையிலான அணியில் கமிந்து மெண்டிஸ்



கடந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிசிறந்த ஆற்றல்களை வெளிப்படுத்திய வீரர்களைக் கொண்ட 2024ஆம் ஆண்டுக்கான ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் அணியில் இலங்கையின் இளம் சகலதுறை வீரரான கமிந்து மெண்டிஸ் இடம்பெற்றுள்ளார்.


இதன்படிஇ 2024ஆம் ஆண்டுக்கான ஐசிசி டெஸ்ட் அணியின் தலைவராக இம்முறையும் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள அவுஸ்திரேலியா அணியின் தலைவரான பாட் கம்மின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அணியில் இங்கிலாந்தைச் சேர்த்த 4 வீரர்களும், இந்தியாவைச் சேர்ந்து 3 வீரர்களும், நியூசிலாந்ததைச் சேர்ந்த 2 வீரர்களும், இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த தலா ஒரு வீரரும் இடம்பிடித்துள்ளன.

அந்தவகையில் ஐசிசி தேர்வு செய்துள்ள டெஸ்ட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக இந்திய அனியின் இளம் அதிரடி வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் இங்கிலாந்தின் பென் டக்கெட் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மேற்கொண்டு மூன்றாம் வரிசையில் நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், 4ஆம் மற்றும் 5ஆம் இடங்களில் இங்கிலாந்தின் ஜோ ரூட் மற்றும் ஹெரி ப்ரூக் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

மேற்கொண்டு அணியின் சகலதுறை வீரர்கள் வரிசையில் இலங்கை அணியின் இளம் வீரர் கமிந்து மெண்டிஸ், அணியின் விக்கெட் காப்பாளராக இங்கிலாந்தின் ஜெமி ஸ்மித் மற்றொரு சகலதுறை வீரராக இந்திய அணியின் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் இடம்பிடித் துள்ளனர். இதுதவிர்த்து அணியின் வேகப்பந்து வீச்சாளர்களாக அவுஸ்திரேலியாவின் பாட் கம்மின்ஸ், நியூசிலாந்தின் மெட் ஹென்றி மற்றும் இந்திய அணியின் ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஐ.சி.சி அறிவித்துள்ள 2024ஆம் ஆண்டுக்கான டெஸ்ட் அணியில் தென்னாப்பிரிக்கா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளில் இருந்து எந்தவொரு வீரரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஐசிசி டெஸ்ட் அணி விபரம்



பாட் கம்மின்ஸ் (அவுஸ்திரேலியா), பென் டக்கெட் (இங்கிலாந்து), யஷஸ்வி ஜெய்ஸ்வா (இந்தியா), கேன் வில்லியம்சன் (நியூசிலாந்து), ஜோ ஷரூட் (இங்கிலாந்து) இ ஹெரி ப்ஷரூக் (இங்கிலாந்து) , ஜெமி ஸ்மித் (இங்கிலாந்து)இ கமிந்து மெண்டிஸ் (இலங்கை), ரவீந்திர ஜடேஜா (இந்தியா), மெட் ஹென்றி (நியூசிலாந்து), ஜஸ்பிரித் பும்ரா (இந்தியா).

### சிறந்த ஒருநாள் வீராங்கனையாக மகுடம் சூடிய மந்தனா



சர்வதேச கிரிக்கெட் பேரவையின் மகளிர் ஒருநாள் போட்டியின் 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்த வீராங்கனையாக இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் இடதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனையான ஸ்மிருதி மந்தனா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டின் சிறந்த மகளிர் ஒருநாள் கிரிக்கெட் வீராங்கனைகளாக பரிந்துரைக்கப்பட்ட லாரா வோல்வார்ட், டோமி பியூமண்ட் மற்றும் ஹேலி மேத்யூஸ் ஆகியோரை அவர் பின்தள்ளி இவ்விருதுக்கு மந்தனா தன் பெயரைப் பதித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும்கடந்த 2024ஆம் ஆண்டு முழுவதும் 13 இன்னிங்ஸ்களில் 57.86 சராசரியுடன் 747 ஓட்டங்களை மந்தனா விளாசியமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

### சிறந்த ரி20 மகளிர் அணியை வழிநடாத்தும் இலங்கையின் சிங்கப் பெண் சமரி



சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் அறிவிக்கப்பட்ட கடந்த ஆண்டுக்களா மகளிர் ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவியாக இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி சமரி அத்தபத்து பெயரிடப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு 21 மகளிர் ரி20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய அவர், 720 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் ஒரு சதம், 4 அரைச் சதங்கள் அடங்கும். அதேபோல பந்துவீச்சில் 21 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.

### மகளிர் ஒருநாள் அணி விபரம்


லோரா வுல்வார்ட் (தென்னாப்பிரிக்கா), சமரி அத்தபத்து (இலங்கை), ஸ்மிருதி மந்தனா (இந்தியா), ஹேலி மெத்யூஸ் (மேற்கிந்தியத் தீவுகள்), மாரிஸ்ஆன் கெப் (தென்னாப்பிரிக்கா), ஏஷ்லி கார்ட்னர் (அவுஸ்திரேலியா), அனாபெல் சதர்லண்ட் (அவுஸ்திரேலியா), அமி ஜோன்ஸ் ( இங்கிலாந்து), தீப்தி ஷர்மா (இந்தியா), சொபி எக்லஸ்டோன் (இங்கிலாந்து), கேட் க்ரொஸ் (இங்கிலாந்து) மகளிர் ஒருநாள் அணியிலும் சமரி அத்தபத்து

கடந்த ஆண்டின் (2024) சிறந்த மகளிர் ஒருநாள் அணியினை சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது. இதில் ஐசிசி ஒருநாள் மகளிர் அணியின் தலைவியாக தென்னாப்பிரிக்காவின் லோரா வுல்வார்ட் பெயரிடப்பட்டுள்ளார். இந்த நிலையில்இ 2024ஆம் ஆண்டுக்கான ஐசிசி மகளிர் சிறந்த ஒருநாள் மற்றும் வு20 அணிகளில் இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்து பெயரிடப்பட்டுள்ளார்.

### மகளிர் ரி20 அணி விபரம்

லோரா வுல்வாட் (தென்னாப்பிரிக்கா), ஸ்மிருதி மந்தனா (இந்தியா), சமரி அத்தபத்து (இலங்கை), ஹேலி மெத்யூஸ் (மேற்கிந்தித் தீவுகள்), நெட் சிவர்-ப்ரன்ட் (இங்கிலாந்து), அமேலியா கேர் (நியூசிலாந்து), ரிச்சா கோஷ் (இந்தியா), மாரிஸ்ஆன் கெப் (தென்னாப்பிரிக்கா), ஓலா ப்ரெண்டகாஸ்ட் (அயர்லாந்து), தீப்தி ஷர்மா (இந்தியா), சாதியா இக்பால் (பாகிஸ்தான்)

### சிறந்த நடுவருக்கான விருதை வென்றார் இங்கிலாந்தின் ரிச்சர்ட்



சர்வதேச கிரிக்கெட் பேரவை ஆண்டுதோறும் சிறந்த டெஸ்ட், ஒருநாள்,டரி20 அணிகள் மற்றும் சிறந்த வீரர், வீராங்கனைகளை தேர்வு செய்து கௌரவித்து வருகிறது. அந்த வகையில் கடந்த ஆண்டின் சிறந்த நடுவருக்கான விருதை இங்கிலாந்தின் ரிச்சர்ட் இல்லிங்வொர்த் வென்றுள்ளார். தொடர்ச்சியாக 3 ஆவது ஆண்டாக இவ்விருதை 61 வயதான ரிச்சர்ட் இல்லிங்வொர்த் வென்றுள்ளார். முன்னதாக 2019, 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் இவ்விருதை அவர் வென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.